நகரத்தார்



நகரத்தார்

திங்கள் இதழ்

61. D, உசுமான் சாலை - சென்னை -17.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

சௌமிய ஆனி * ஜூன் -14, 1969

ஆண்டுக் கட்டணம் ரூ. 3-50

ஆசிரியர்
புலவர்நாகசண்முகம்

பரிந்துரையாளர்
எஸ். பிஎல். பழநியப்பா, பி.ஏ., பி.எல்.

குறிப்பு ஒன்று — பேரேடு மூன்று

பக்கம்	பயன்
3	என்னம்
5	நற்பணியாற்றி வளர்க!
7	ஆயுள் உறுப்பினர்
8	அருள் சுரக்கும் அன்னை
9	நகரக்கோயில்கள்
12	கலை வளர்க்கும் பெருமகள்
17	காரணம் என்ன?
20	கவிதைப் பூங்கா
22	வளம்பெற வாய்ப்புக்கள்
25	நகரத்தார் கடித நடை
29	ஆச்சிகள் உலகம்
31	நாட்டு நடப்பு
35	செய்தி மலர்
40	திருமுகம்

கலைத் தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களின் வாழ்த்துக் கட்டுரை ஐந்தாம் பக்கம் இடம் பெற்றுள்ளது.



பெண்குலம்!

அன்பு, அருள், கருணை, பண்பு, பாசம்—இவையெல்லாம் பிறக்கின்ற ஓர் இடம், ஒரே இடம்!

அதனால்தான் தோன்றாத் துணையான இறைவன் பிள்ளைப் பேற்றினைப் பெறுகின்ற சிறப்பினைப் பெண்குலத்திற்கு உரிமை யாக்கினான்.

"மங்கைய ராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா!"

என்று பெண்குலத்தின் பெருமையினைக் கவிமணியவர்கள் பொன் மணிச் சரமாய்ப் புத்தம் புது மலராய்ச் சிறப்பித்துள்ளார்கள்.

ஒரு குடும்பத்தின் உயர்வுக்கும் பெருமைக்கும் ஒரு மரபின் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் காரணமானவர்கள் பெண்கள்தாம் என்றால் அதில் துளியும் மிகையில்லை.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி யுண்டு. 'ஒருவனைப் பற்றி அறிய அவன் நண்பனைப் பார்' என்று. அதுபோல, ஒரு சமூகத்தின் வாழ்க்கையினை, அமைப்பினை, உயர்வினை அறிந்துகொள்ள அச் சமூகத்துப் பெண்களின் பழக்க வழக்கங்களே தக்க துணையாக அமையும். அவர்களைக் கொண்டே அந்தச் சமூகத்தினை அளவிட்டுவிட முடியும்.

நீரும் உரமும் பயிரை வளர்ப்பது போல, கல்வியும் அறிவுமே மனித குலத்தை வாழவைக்கின்றன. எத்துணைதான் இயற்கை அறிவிருப்பினும் கல்வியற்ற அறிவு நிறைவற்ற ஓவியமாகவே ஆகும்.

அதனுல்தான் "கற்றனைத் தூறு மறிவு" என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆண்களுக்கு ஒப்பவே பெண்களும் கல்வி கற்க வேண்டியது இன்றியமையாதது. ஒவ்வொரு வீட்டின் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாததுதான்!

நம் மரபுப் பெருமக்கள் பல கல்லூரிகளையும் பள்ளிகளையும் நிறுவியுள்ளார்கள். பக்திக்காக மட்டுமல்லாமல் கல்விக்காகவும் அவர்கள் செய்த அறங்கள் காலம் கடந்தும் நிலைத்து நிற்கக் கூடியவை யாகும். அத்தகைய மரபில் பிறந்த பெண்கள் கல்வி கற்பதில் பின் தங்கியிருக்கலாமா?

கல்வி என்ற ஒளியால் மூடப் பழக்கம், அறியாமை அகலும்; உலகியலறிவு பெருகும்; பரந்த மனப்பான்மை வளரும்.

ஒரு பெண் கல்வி கற்றுல் ஒரு குடும்பமே கல்வி கற்றதற்கு ஒப்பாகுமன்றே? பெண்கள் கல்வி கற்று என்ன பணி புரியப் போகிறுர்கள் என்ற எண்ணம் பெற்றேர்களுக்கு நீங்கிப் பலதுறையிலும் அவர்கள் பட்டக் கல்வி கற்பதற்குப் பெற்றேர்கள் துணை நிற்க வேண்டும். பெண்களும் அதை முழுமையாகப் பயன் படுத்திக் கொண்டு முன்னேற்ற மடைய வேண்டும்.

நம் மரபினர் ஆர்வமும் துடிப்பும் முன்னேற்றமும் உள்ள சமூகத்தினராக மாற ஒரே வழி நம் மரபுப் பெண்கள் அனைவரும் கல்விச் செல்வத்தைப் பெறுவதுதான்!

நம் பெண்கள் உரியவனுக் கேற்ற துணைவியாகவும் உலகில் பிற பெண்களுக்குச் சரி நிகராகவும் வாழ வழிவகுப்பது நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

அஞ்சலி

நன்மனத்தார்!
நல்லனவே செய்துநின்ற நல்லமைச்சர்
பொன்மனத்து அண்ணனுக்குக்
கண்ணனைய நல்தோழர்
கோவிந்த சாமியெனும் பெயருடையார்
கொடுமனத்துக் காலனுக்கு இரையானுர்!
கண்ணீரால் நீராட்டிக்
கடமை தனைப்போற்றி
அண்ணலவர் ஆன்மா
அமைதிபெற அஞ்சலிப்போம்!

நற்பணியாற்றி வளர்க!

கருமுத்து தியாகராசச் செட்டியார்

நாட்டுக்கோட்டை நன் மரபினரின் கல்வி, தொழில், வாணிபம் ஆகியவற்றின் வளர்ச்சி பற்றியும் அவர்தம் சமயப் பணி, கொடைத் திறன் முதலிய உயர் பண்புகள் குறித்தும் பொது மக்களுக்கு அறிவிக்கும் வகையில் ''நகரத்தார்'' என்னும் திங்கள் இதழைச் சேது நிலையத்தார் வெளியிடுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன்.

நகரத்தார் மரபினர், ''என்றுமுள தென்தமிழ்'' போல், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே, வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்தில் பண்பின் தலைப் பிரியாது வாழ்ந்து வருகின்றனர்.

''மன்னவர் பின்னோர்'' என்று இளங்கோ அடிகளாலும் சங்கச் சான்றோர்களாலும் போற்றப்பட்ட நகரத்தார் செல்வச் சிறப்பிற்கும், உயர் ஒழுக்கத்திற்கும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காவிய மணிகள் நற்சான்று பகர்கின்றன.

நமது மரபினர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே காலினும் கலத்தினும் தொலை நாடுகட்குச் சென்று, அறவழி நின்று, கொள்வதும் மிகை கொளாமல் கொடுப்பதும் குறை படாமல், நல்வாணிகம் செய்து அரும்பொருட் பெருங்குவை ஈட்டினர். அவ்வாறு ஈட்டிய பொருளை, ஊருணி நீர்நிறைந்தாற் போலும், பழுமரம் உள்ளூர்ப் பழுத்தாற் போலும், தக்கார்க்கு வரையாது வழங்கினர்.

மேலும் அலைகடலுக்கு அப்பாலுள்ள ஈழம், கடாரம், சாவகம், மலேயா, தாய்லாந்து, இந்தோசீனம் முதலிய நாடுகளிலும், நமது தாயகத்தில் குமரி முதல் இமயம் வரையிலும், உலகம், உடல் உயிருக்கு முதல்வரான இறைவற்குக் கற்றளிகள் எழுப்பினர். சிவபூசை சிறப்புற நடத்தற்கு மலர் வனங்களையும், பசு மடங்களையும் நிறுவினர். திருத்தலங்கட்கு இறையன்பர்கள் இனிது சென்று உய்திபெறும் வகையில் அறக்கூழ்ச் சாலைகள், திருக்குளங்கள், திருமடங்கள் அமைத்தனர்.

இத்தகு அறச்செயல்களோடு அமைந்துவிடாமல், அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்த்து அகக் கண்ணிற்கு ஒளியூட்டி, உயிர்க்கு உறுதி பயப்பது கல்வியே எனத் தெளிந்து, கல்வி நிலையங்களையும், பல்கலைக் கழகங்களையும், தேவார பாடசாலைகளையும், தமிழிசைப் பள்ளிகளையும் நகரத்தார் பெருமக்கள் நாட்டின் பல பகுதிகளில் தொடங்கி நடத்துவாராயினர்.

ஆயின், அண்மைக் காலத்தில் உலக அரசியல் அரங்கில் ஏற்பட்ட பெருமாற்றங்கள் நகரத்தார் மரபினரை, குறிப்பாகப் பர்மாவிலும் ஈழத்திலும் தொழில் வாணிபம் செய்து வந்தவரை வெகுவாக ஊறுபடுத்தின. அதனால், "குன்றத்தனை இருநிதியைப் படைத்தோர் அன்றைப் பொழுதே அழியினும் அழிவர்" என்னும் மெய்யுரைக் கேற்ப, செல்வச் சிறப்புடன் வாழ்ந்த பல்லாயிரம் நகரப் பெருமக்கள் அரும்பொருளிழந்து, வீடு நிலம் பறிகொடுத்து, வெறுங்கையினராய்த் தாயகம் திரும்ப நேரிட்டது. இரங்கத்தக்க இம் மக்கட்கு மறுவாழ்வு அளிக்கவும், இவர்தம் புதல்வரின் கல்வி நலம் பேணவும், வயது வந்த மகளிரின் திருமணத்தைத் தட்டாது நடத்தி வைக்கவும் நகரத்தார் சமூகத்தின் ஒருமித்த முழு முயற்சி தேவைப்படுகிறது.

இந் நன்முயற்சியில் பல நகரங்களில் அமைந்துள்ள நகரத்தார் சங்கங்கள் ஏற்கனவே ஈடுபட்டுள்ளன. எனினும், சுடர் விளக்கிற்குத் தூண்டுகோல் வேண்டியிருப்பதைப் போன்று, இச் சங்கங்கள் மேன்மேலும் ஊக்கமுடன் நற்பணியாற்ற ஒரு தூண்டுகோல் தேவை. இதை "நகரத்தார்" நறுந்திங்கள் இதழ் இனிது புரிந்து, நாளும் வளர்ந்து நலமுற்றுச் சிறந்தோங்க ஆலவாய் அவிர்சடையண்ணல் அருள் புரிவாராக.

ஆயுள் உறுப்பினர்

நம் இதழுக்கு ஆயுள் உறுப்பினர்களான பெருமக்களின் விவரங்களை மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம். ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ. 101 ஆகும்.

எஸ். கே. எம். எஸ்பி. மெய்யப்ப செட்டியார்,

(காரைக்குடி)
7, டாக்டர்நாயர் ரோடு
தியாகராய நகர்,
சென்னை-17.

சி. ஆர்எம். ராமசாமி செட்டியார்,

(மகிபாலன்பட்டி)
85-G, ராமநாதபுரம் சாலை,
மதுரை.

சோம. இயற்பகைச் செட்டியார்,

(வேந்தன் பட்டி)
நாகப்பா மில்ஸ்,
புதுப்பட்டி அஞ்சல்,
திருச்சி மாவட்டம்.

எம். எஸ். மெய்யப்பன்,

(காரைக்குடி)
68, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை-28.

ஒ. எம். எஸ்பி. எல். ஏ. அழகப்ப செட்டியார்,

(தேவகோட்டை)
பிளாட் 17, லக்ஷ்மி தெரு,
சென்னை-10.

பிஆர். பழநியப்பன்,

(கொப்பனாபட்டி)
லக்ஷ்மணஞ் செட்டியார் & கோ,
554, பூந்தமல்லி நெடுஞ்சாலை,
சென்னை-3.

ஏ. திருநாவுக்கரசு

(தேவகோட்டை)
வானதி பதிப்பகம்,
பாண்டி பஜார்,
சென்னை-17.

எஸ். எம். பிஎல். எஸ்பி. எஸ்எம். எஸ்எம். சோமசுந்தரம் செட்டியார்,

6, டி. ஆர்எம். டி. தெரு,
தேவகோட்டை.

சிடி. செந்தில்நாதன் செட்டியார்,

(தேவகோட்டை)
ரத்ன செட்டி தெரு,
ராயப்பேட்டை,
சென்னை-14.

எம். அருணாசலம்,

(காரைக்குடி)
34-சுந்தரராஜன் தெரு,
அபிராமபுரம்.
சென்னை-28.

அருள் சுரக்கும் அன்னை

எண்ணியார்க்கு எண்ணியதை நல்குகின்ற பெருங் கருணை வடிவாகக் காரைக்குடிக் கொப்புடையம்மன் விளங்குகிருள். அந்த அருட் பெருங் கடலின் திருவுருவப் படத்தினை இந்த இதழ் அட்டையில் வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம்.

படம் நல்கியவர் : சுந்தரம் ஸ்டுடியோ
காரைக்குடி

பாடலாசிரியர் : புலவர்நாகசண்முகம்

கொப்புடைய அம்மன் என்ற
குலங்காக்கும் அன்னையே!—நீ
அற்புதங்கள் செய்கின்ற
அருட்சுடராய் விளங்குகிருய்!

காரைக்குடி நகர்மேவும்
கன்னியே சரணம் அம்மா!
ஊர்வாழ ஒளிநல்கும்
உத்தமியே சரணம் அம்மா!

உன்னருளை விளக்குதல்போல்
ஊருணி விளங்குதம்மா!
உன்புகழை விளக்குதல்போல்
ஒலிக்குதம்மா கோயில்மணி!


ஊதுவத்தி மணம்தனிலும்
உன்புகழே மணக்குதம்மா!
தேரோடும் வீதியெல்லாம்
திருவிழாக் கோலமம்மா!

கோபமாய்ப் பார்க்கின்ருய்
பாவமதைப் போக்குதற்கு!
நெருப்பாக நிற்கின்ருய்
தீமைதனை எரிப்பதற்கு!

பொன்மனத்துத் திருமகளே!
நின்கருணைக் கெல்லையில்லை!
நகர்வாழ, குலம்வாழ
நல்லவரம் நல்கிடுவாய்!



காரைக்குடி. சா. நா. அ. அழ. அழகப்பசெட்டியார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா சௌமிய ஆண்டு வைகாசித் திங்கள் 9ஆம் நாள் (21-5-69) சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. (கீழே) மணிவிழாக் கண்ட மண மக்களுக்கு பெருமதிப்பிற் குரிய டி. டி. கிருஷ்ண மாச்சாரி அவர்கள் புனித நீராட்டி மகிழ்கின்றுர்கள்





பள்ளத்தூர் சிவத்திரு சு. ராம. பழநியப்ப செட்டியார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா சௌமிய ஆண்டு வைகாசித் திங்கள் 25ஆம் நாள் (7-6-69) சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

கொப்பனாபட்டி எல். பிஎல். பழநியப்ப செட்டியார் மகன் திருவளர்செல்வன் சேது லெட்சுமணனுக்கும் புதுப்பட்டி டாக்டர் எஸ்பி சன்முகம் செட்டியார் மகள் திருவளர்செல்வி வள்ளிமயிலுக்கும் 28—5—69ஆம் நாள் மணமகள் இல்லத்தில் சீரோடும் சிறப்போடும் திருமணம் நடைபெற்றது.



நகரக் கோயில்கள்



'தமிழண்ணல்' இராம. பெரியகருப்பன் எம். ஏ.

இந் நகரக் கோயில்கட்கு எனத் தனி மேளக்காரர், குருக்கள்மார், தண்டல்காரர், பிற அலுவலர் ஊர்தோறும் இருப்பர். இவர்கட்கு கோயிலைச் சார்ந்த தனிக் குடியிருப்புக்கள் பெரும்பாலும் உண்டு. இவர்களுள் 'தண்டல்காரர்' இங்குக் குறிக்கத்தக்காராவர். இவர்களைத் 'தண்டக்காரர்' என்கின்றனர். 'பண்டாரம்' என்றும் அழைப்பர். இன்று இவர்கள் கோயிலைச் சார்ந்த பூங்காவை (நந்தவனத்தை) மேற்பார்வையிடுதல், கோயிலுக்கு மாலை கட்டுதல், நகரமக்களிடையே 'நல்லது கெட்டது' அனைத்திற்கும் முன்னின்று நடாத்துதல் போன்றபணிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் சொல்வழி நாகரிகத்தை ஆராய்ந்தால் 'பண்டாாம்' என்பது 'பொக்கிஷத்தை'க் குறிக்கும். 'தண்டல்' என்பது வரி வசூலித்தலைச் சுட்டும். எனவே, கோயில்வரி வசூலித்து, அந்நிதி மிகுந்த கருவூலத்தைக் காப்பவராக இவர்கள் பணி தொடங்கியிருக்க வேண்டும். காலப் போக்கில் தவறுகள் நேரவே, நகரத்தார் தம்முள்ளேயே ஒரு சிலரைக் கோயிலில் 'காரியம்' பார்க்க ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்துக் கொள்வாராயினர். இத் தண்டல்காரர்கள் நகரக் கூட்டங்களுக்கு நகரப் பெருமக்களை அழைக்கவும், நகரக் கூட்ட முடிவுகளை அன்னார்க்கு அறிவிக்கவும், பிற பொதுச் செய்திகளைக் கூறவும் வீடுவீடாகச் செல்லும் செய்தியாளர்களாகப் பணிபுரிகின்றனர். ஒவ்வொரு திருமணச் சடங்கிலும் தண்டல்காரி அல்லது தண்டல்காரன் முன்னதாகக் கையில் விளக்கேந்திச் செல்வர் அல்லது சங்கு ஊதிச் செல்வர். ஈமச் சடங்குகளையும் இவர்களே முன்னின்று நடத்துவர். நகர மக்களில் இளமையுடையார் பலர் இன்று தமக்குத் தெரியாத பல பழக்க வழக்கங்கள், சடங்கு முறைகளையெல்லாம் தண்டல்காரியைக் கேட்டுக் கேட்டு அதன்படி செய்வர். கையில் தருப்பையும் நாவில் வேத ஒலியுமாகச் சடங்குகளை முன்னின்று நடத்தும் சாமி ஐயரையும் இத் தண்டல்காரி 'இப்படியன்று, அப்படி' என்று சடங்கு முறை மரபுகளைச் சுட்டிக் காட்டித் திருத்துவதைக் காணலாம். நகரக் கூட்டங்களிலே நான்கைந்து நகரப் பெருமக்கள் கூடிப் பொதுவிவகாரத்தை ஆராயுமிடத்திலேகூட "எங்கே? தண்டல்காரி?" என்ற குரலைக் கேட்கலாம்.

சமூக விதிகளை அல்லது கட்டு களை உருவாக்குமிடம் இந் நகரக் கோயிலேயாகும். நகரத்தார்கள ளைவரும் கோயில் முன்மண்டபத் திலோ, வலம் வரும் வழியிலோ கூடுவர். இதற்கு நகரக் கூட்டம் என்று பெயர். தம்முட்பேசி விதி முறைகளைக் கட்டுகளை வகுப்பர். இடையிடையே ஏற்படும் இந்தக் கட்டுகளுக்கு 'ஊர்க்கட்டு,' அல் லது 'ஊர்க் கட்டுப்பாடு' என்று பெயர். இந்தக் கட்டுகள் காலத் தேவைக்கேற்ப சமூகத்தில் பின் பற்றவேண்டிய சில புதிய சிக்கன மான சடங்கு முறைகள், சீர் வரிசைகளைப் பற்றியதாகவே இருக்கும். பழமையில் விருப்பமும் போலிக் கவுரவத்தில் ஈடுபாடும் உடைமையால் பெரும்பாலும் கட்டுகளை மீறி, அவற்றை உடைத் தெறிவதே இவர்கள் வழக்கமாக இருந்து வருகிறது. ஆண்பிள்ளைக் குக் கலியாணம் பேசும்போது ஒரு பேச்சும் பெண் பிள்ளைக்குத் திரு மணம் பேசும்போது ஒரு பேச்சு மாகப் பேசி நகரப் பெருமகனுர் அல்லற்படுவதைக் காணலாம். பழைய சடங்குக்கும் சீர்களுக்கும் புதிய வாழ்வு முறைக்கும் முரண் பாடாகிய இடைவெளி பெருகி வருவதே இதற்குக் காரணம். இங் ஙனம் கட்டுகளை, விதிகளை உரு வாக்குமிடமாக (Legislature) மட்டுமன்றி, அவற்றைச் செயல் படுத்தும் இடமாகவும் (Executive) இத்திருக் கோயில்களே உள் ளன. இங்குக் கூடும் நகரக் கூட் டங்களிலேயே விதிகளை மீறியவர் களை, கோயில் வரி போன்றவற் றைக் கட்டாதவர்களை அல்லது கட்ட மறுப்பவர்களை, பிற தண் டனையளிக்கத்தக்க சமூகக்குற்றம் புரிந்தவர்களை அபராதம் விதித் தோ, தள்ளி வைத்தோ (சமூக உறவினின்றும் நீக்கி யாரும் நல் லது கெட்டதில் கலந்து கொள் ளாவாறு தடுத்து விடுதல்) பிற வாறே தண்டிப்பர். மேலும் குற்றங்களை விசாரித்தறியும் நீதி மன்றமாகவும் (Judiciary) இத் திருக்கோயிலில் நிகழும் நகரக் கூட்டங்களே பயன்படுகின்றன. இங்ஙனம் ஊராட்சி முறையின் மையமாக இத் திருக்கோயில்கள் விளங்குவதைச் செட்டிநாட்டு ஊர்களில் இன்றும் காணலாம். 'நகரக் கூட்டம்,' 'ஊர்க் கூட்டம்' என்பன முறையே நகர மக்கள் மட்டுமே கூடுவதையும் பிற ஊரார் அனைவரும் கூடுவதையும் குறிக்கும். நகரத்தாரனைவரும் கூட்டும் பெரும் மா நாடு போன்ற கூட்டங்கள், காரைக்குடியை அடுத்த கோயிலூர் போன்ற ஊர் களில் கூடியதுண்டு. அதனைத் தொண்ணூற்ருறு ஊர் நகரக் கூட்டம் என்று அழைத்தனர். நகரத்தார்கள் வணிகர்களாத லின் செல்வம் உடையவர்க்கும், செல்வாக்கு உடையவர்கட்கும் இந்நகரக் கூட்டங்களில் எப்போ தும் 'கை' ஓங்கியிருக்கும் என்பர். ஆயினும் மிக ஏழை முதல் மிகப் பெரும் செல்வர்வரை அனைவருக் கும் சமமாகப் பங்குகொள்ள உரிமையுண்டு. அங்கு ஒலிக்கும் குரல் நகரக் குரல்—அது சக்கரம் போல் சுழலும் செல்வ ஏற்றத் தாழ்வுகட்கு அப்பாற்பட்ட சமூக உரிமைக் குரலாகும்.

இசை, நாட்டியம் அனைய கலை கட்கும் இந்நகரக் கோயில்கள் பெரும்பணி ஆற்றியுள்ளன. நாத சுர இசைக் கலைஞர்களை இக்கோயி லின் ஓர் உறுப்பினர்களாகவே கருதுவர். பரத நாட்டியம் இல் லாத திருவிழாவே முன்பு நடை பெறுவதில்லை. சில ஊர்களில் பொட்டுக்கட்டிய 'தேவதாசியர்' குடியிருப்புக்களும் இருந்ததுண்டு. நகர ஆடவரிடையே சிறிது ஒழுக் கக்கேடு நிலவியமையும் இதனல் புலனுகும். தேர்த்திருவிழா ஆண்டு தோறும் நிகழும். அது போழ்து 'கூத்து' அவசியம் உண்டு.

அதனுடன் வாணவேடிக்கை கண் கொள்ளாக்காட்சியாக இருக்கும். கரக ஆட்டம், பொய்க்கால் குதிரை, காவடியாட்டம், ஒயி லாட்டம் அனைய கிராமியக்கலைக ளெல்லாம் இத்திருவிழாக்களால் புத்துயிர் பெறும்.

இத்திருக்கோயில்கள் வாணிக வளர்ச்சிக்கும் உதவின. கடல் கடந்த நாடுகளிலும்-இரங்கூன் போன்ற நகர்களில் 'ஆறரை' என்ற கோயிலிடத்திலேயே நகரக் கூட்டங்கள் கூடினர். இங்ஙனம் ஆண்டவனை நம்மை ஆள்பவனாக வும் கோயிலை அரண்மனை அல்லது ஆளுமிடமாகவுமே கருதி (சொற் பொருளின்படி இவை மிகவும் பொருந்தும்) புள்ளி வரி செலுத்தி வாழும் குடிமக்களாகிய நகரப் பெருமக்கள் வெளியுலகில் அரசிய லில் யார் ஆண்டாலும் அவ்வளவு அதிகமாக அலட்டிக் கொள்ளவ தில்லை. மூவேந்தர்களின் ஆட்சி குப் பிறகு 'யார், யாரோ' ஆள நேரிட்டதால், உலக நிலையாமை யைக் கருதி இம்மரபினர், பத்தி இயக்கம் பண்பட்ட பிறகு இச் சமூக அமைப்பினைப் பின்பற்றின ராதல் வேண்டும். எங்ஙனமாயி னும் பழுத்த அனுபவத்திற் பிறந் ததே இச்சிரிய பண்பாடு எனல் தகும். காவிரிப்பூம் பட்டினம் அனைய பெரிய உலக வாணிகமே நிகழ்வுற்ற நகரத்தில் வாழ்ந்த இம்மரபினர் — மன்னர் பின்னோ ராக மதிக்கத்தக்க வாழ்வு வாழ்ந்த இம் மரபினர்பாண்டி யன் மனைவியின் காற்சிலம் போடு ஒப்ப விலைமதிக்கக் கூடிய தாக மட்டுமன்றி, அதைவிட 'மாணிக்கப்பரல்' உடைமையால் உயர்வாகவும் மதிக்கக்கூடிய காற் சிலம்பு அணிந்திருந்த கண்ணகித் தாயின் வழியினராகிய இம்மரபி னர் பூம்புகாரைக் கடல்கொண்ட ஞான்று, அந்நகரைவிட்டுப் புறப் பட்டனர். 'சிலம்பு முதலாகத் தான் இழந்த வான்பொருட் குன்றத்தை' ஈட்டுதற்குக் கோவலன் தன் மனைவியுடன் சென்ற பாண்டிய நாட்டிலே தான் அவர்களும் குடியேறினர். ஆனால் நகரங்களை நாடினு ரல்லர். கோவலன் போனதுபோல் மதுரைமா நகர் நோக்கிப் போயி னர் அல்லர். வையைக்குத் தெற்கே கிடந்த பாண்டிநாட்டுச் சிற்றூர்களிலே தமது பெருஞ் செல்வத்தைத் தேக்கி வைக்கும் மாடமாளிகைகளை எழுப்பிக் கொண்டு அவற்றிற்கு அணி செய்து வாழ்வாராயினர். அது போலவே ஆள்வோர் மாறுதல்ங் களால் அழிந்துவிடாது தம்மைக் காத்துக்கொள்ள 'ஆண்டவன் குடிமக்களாகத்' தம்மை ஆக்கிக் கொண்டனர். களப்பிரர் குழப்ப மாகிய 'இருட்காலம் முதல்' முகமதியர் படையெடுப்பும் வெள்ளைப் பரங்கியர் ஆட்சியும் ஏற்பட்டபி ற்காலம் வரை வெளி யுலக 'அவதிகளால்' அழிந்து விடாது இக்'கோயிலைச் சார்ந்த' குடிமக்கள் அப்பரடிகளைப் போல் வாழலாயினர்.

"நாமார்க்கும் குடி அல்லோம்;
நமனை அஞ்சோம்; ....

கொய்ம்மலர்ச் சேவடி இணையே
குறுகி னோமே"

என்ற இத் திருத்தாண்டகத்திற் கேற்ற பண்பட்ட வாழ்வையே நாம் நகரத்தார்களின் 'கோயில் வழி நாகரிகத்தில்' காண்கிறோம். இந்நகரத்தார்களின் தொன்மைக் குச் சான்றாகவும் கலை, அற உணர்வுகட்கு எடுத்துக் காட்டாக வும் திகழும் ஒன்பது நகரக் கோயில்களைப் பற்றி இனிவரும் கட்டுரைகளில் தனித்தனியாக ஆராய்வோம்.

கலை வளர்க்கும் பெருமக்கள்

ஏ. வி. மெய்யப்ப செட்டியார்

எம். வி. எம். அழகப்பன், எம். ஏ.

இந்தியத் திரையுலக வரலாற்றினையும், வளர்ச்சியினையும் எழுதுவதற்கு யாரேனும் முற்பட்டு அதற்கு ஆதாரங்கள் ஏதேனும் தாருங்கள் என்று கேட்டால் என்னுடைய ஒரே பதில் இதுவாகத் தானிருக்கும்.

மதிப்பிற்கும், பெருமைக்கும் உரிய திருவாளர் ஏ. வி. எம். செட்டியார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை எடுத்துக் கொண்டு, அவர்கள் கலையுலகில் கால் வைத்தது முதல் இன்று வரை எவ்வாறு செயல் புரிந்து வந்துள்ளார்கள், அதற்கு எவ்வகையான வழிமுறைகளைக் கைக்கொண்டார்கள் என்பனவற்றை ஆராய்ந்தால், அதற்குக் கிடைக்கும பதில் 'திரையுலக' வளர்ச்சியின் வரலாற்றினை அறிந்துகொள்வதற்குப்பெரும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

உடையர் எனப்படுவது ஊக்கம் என்ற வள்ளுவர் வாக்கிற்கு, திரு. ஏ. வி. எம். அவர்கள் மிகச்சிறந்த உவமையாக விளங்குகிறார்கள். ஊக்கம், அதன் அடிப்படையாக வந்த உறுதி, தெளிவும் காலம் போற்றும் தன்மையும் உடைய செயலாக்கம் ஆகியவற்றையே தம்முடைய துணைகளாகக் கொண்டு தொடக்ககாலத்தில் தொழிலில் இறங்கியவர்கள் அவர்கள்.

முதலில் கூட்டு முயற்சியிலேயே அவர்கள் தொழிலில் ஈடுபட்டார்கள். அப்பொழுது ஹரிச்சந்திராவிலிருந்து ஸ்ரீ வள்ளி வரை பல படைப்புக்களைத்தந்தார்கள். ஆயினும் அவர்களுடைய மூன்றெழுத்துக் கொண்ட (ஏ. வி. எம்,) தனிப்பட்ட முயற்சியின் முதற்படைப்பான 'நாம் இருவர்' அவர்களுடைய திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது. சுருங்கச் சொன்னால் சிக்கனமான முறையிலும் மிகச் சிறந்த வெற்றிப் படத்தைத் தயாரிக்க முடியும் என்பதற்கு அந்தப்படம் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. தமிழ் நாட்டுத் திரைப்படத் தொழில் வரலாற்றில் அந்தப் படம் ஒருதிருப்பமாக அமைந்தது; அதே சமயம் கலை என்ற பெயரால் கீழான உணர்ச்சிகளைத் தூண்டிஅதன் மூலம் அந்தப் படம் பெரும் வசூலைப் பெறவில்லை.

நாட்டுப்பற்றைக் கொண்ட நல்ல கதை அமைப்பு கருத்தாழமும், எளிமை நிறைந்த வசனங்கள் இவற்றிற்கும் மேலாகச் சுதந்திர உணர்ச்சியைத் தூண்டுகின்ற பாரதியாரின் வீரமிக்க பாடல்கள் இவை எல்லாம் அந்தப் படத்தில் இடம் பெற்று அனைவரும் பார்க்கத்தக்க ஒரு நல்ல காவியமாக அமைந்தது. ஏ. வி. எம். அவர்களைத் திறமையின் உருவம் என்பதை விட திறமையான சிகரம் என்றே சொல்லலாம். அந்தச் சிகரத்திற்கு அடித்தளம் என்ன தெரியுமா? ஓயாத உழைப்பு!

இந்த உலகில் உழைக்காதவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பது உலகறிந்த உண்மை. ஆனால் பலர் உழைத்தும் முன்னேறாமல் இருக்கிறார்கள் என்பது நாம் அறிய வேண்டிய உண்மை. காரணம்? திட்டமிடப்படாத முறையில் போடப்படும் திட்டங்கள் எல்லாம் வீணே! உழைப்பு எல்லாம் பயனற்றவையே.

ஏ.வி.எம். அவர்களின் உழைப்பு புடம் போடப்பட்ட தங்கம் போன்றது. தங்கத்தில் எந்த அணி செய்தாலும் தரத்தில் குறையாதது போல, அவர்கள் எதைத் தொட்டாலும் பொன் ஆகிறது. இல்லையென்றால் சில ஆண்டுகளுக்கு முன்னர் பர்ணசாலை போல விளங்கிய அவர்கள் படப்பிடிப்பு நிலையம், இன்று பன்மடங்கு பெருகியதோடு பல மாநிலத்தவரும் விரும்பிப் போற்றும் பல சாதனங்களையும் உடையதாய் உயர்ந்து விளங்க இயலுமா?

திரைப்படத் துறையில் பலத் திருப்பங்களை உண்டாக்கிய பெருமைக்கு உரியவர்களாக ஏ.வி.எம். அவர்கள் விளங்குகிறார்கள்.

பாடும் திறமை உடையவர் தான் நடிக்க முடியும் என்றிருந்த நிலைமையை அவர்கள்தான் மிகச் சிறந்த முறையில் மாற்றினார்கள்.

அவர்கள் உருவாக்கிய ஸ்ரீவள்ளி படத்தில் பின்னணி பாடுவது என்ற புதியமுறையை முன்னணிக்குக் கொண்டு வந்தார்கள். அந்தப் புதுமையால், புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டன. பாட இயலாதவர்களாயினும் நடிப்புக் கலையில் தேர்ந்தவர் பலர் திரைப்படத் துறையில் தொடர்பு கொள்ளவும் பெரு வெற்றி பெறவும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. சுருங்கச் சொன்னால் சினிமா என்ற பெயரில் நிலவி வந்த பழைய நாடகப் பாணியை நீக்கித் தொழில் நுட்பம் மிகுந்த படங்கள் பல வெளிவருவதற்குச் செட்டியார் அவர்கள் பெரும் காரணமாக விளங்கினார்கள்.

பின்னணி பாடுதல் என்ற முறையை உருவாக்கியதுடன் மிகச் சிறந்த படங்களை மொழி மாற்றுச் செய்து வெளியிட்டுப் பெரு வெற்றியும் அரும் புகழும் பெற்றார்கள்.

இந்தியில் வெளிவந்து வெற்றிக் கொடி நாட்டிய "ராம் ராஜ்யா" என்ற படத்தினை அவர்கள் தமிழாக்கி வெளியிட்டார்கள். அவர்களது இந்த முயற்சி தமிழ் நாட்டு ரசிகப் பெருமக்களின் ஒருமித்தப் பாராட்டுதலைப் பெற்றதுடன் படத்தயாரிப்பாளர்களின் கவனத்தையும் கவர்ந்தது. செட்டியார் அவர்கள் அதன் பிறகு பல்வேறு மொழிகளில் பல படங்களை மொழிமாற்றுச் செய்து வெற்றிக் கொடி நாட்டியுள்ளார்கள். அவர்களைப் பின்பற்றித் தென்னகத்துப் படத் தயாரிப்பாளர்கள் பலரும் பல படங்களை மொழி மாற்றுச் செய்துள்ளார்கள்; செய்துவருகிறார்கள். திரைப் படத்துறையில் இன்று இது ஒரு

தனிப்பிரிவாகவே விளங்குகிறது என்றால் மிகையில்லை.

சிக்கனமான முறையிலும் சிறந்த வகையிலும் சமூகப் படங்களைத் தயாரித்து வெற்றிகாணும் ஏ. வி. எம். அவர்கள், வேதாள உலகம், பக்தபிரகலாதா, நாக தேவதை, சிவபக்தா (ஹிந்தி) முதலிய படங்களைத் தயாரித்து வெற்றி கண்டதன் மூலம் புராணப் படங்களையும் சிறப்பாகத் தயாரிக்க முடியும் என்பதை நிலை நாட்டினார்கள்.

தமிழ் நாட்டுத் திரைப்பட வரலாற்றில் திருப்பங்களை உருவாக்கும் திருமகனாக விளங்கிய ஏ. வி. எம். அவர்கள் இந்திப் படங்களைத் தயாரிப்பதன் மூலம் இந்தியத் திரைப்பட வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க பெரும் இடத்தைப் பெற்றார்கள். அவர்கள் தமிழில் முதலில் தயாரித்துப் பின் இந்தியில் தயாரித்த 'வாழ்க்கை' திரை படம் அவர்கள் வாழ்க்கை வெற்றிகளின் சிகரமாக அமைந்ததுடன் பல மொழிகளில் அப்படம் வெளி வந்து திரை உலகத்தின் வாழ்க்கைக்கே பெருமை தேடித்தந்தது.

தமிழ் நாட்டில் வெற்றி நடை போட்ட பல படங்களை இந்தியில் தயாரித்துச் செட்டியார் அவர்கள் வெற்றிக் கொடி நாட்டி இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் வடநாட்டிலும் ஏ. வி. எம். என்ற மூன்று எழுத்துக்கள் கலை உலகின் தனிப்பெரும் முத்திரையாக விளங்கி வருகின்றன; என்றும் விளங்கிவரும்.

"விரைந்து தொழில் கேட்கும்
ஞாலம் நிரந்து இனிது
சொல்லுதல் வல்லார்ப்
பெறின்"

என்ற குறளுக்கு விளக்கமாக அவர்களுடைய வாழ்க்கை அமைந்திருக்கின்ற சிறப்பினை அறிவாற்றல்களை, இந்தியத் திரைப்பட ஏற்றுமதிக் கார்ப்பொரேஷன் தென்னிந்தியப் படப்பிடிப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் சங்கம், முதலியவை இவர்கள் துணையை நாடிப் பயன் படுத்திக் கொள்வதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு அளவு கோல் அந்த நாட்டுக் குழந்தைகளின் மன வளர்ச்சியே ஆகும். திரைப்படம் வெறும் பொழுது போக்குச் சாதனம் மட்டுமல்ல. அதைக் கொண்டு சமுதாயத்திற்கு நலமிக்கப், பல காரியங்கள் செய்ய முடியும் என்பதை ஏ. வி. எம். அவர்கள் தொடர்ந்து நிருபித்து வந்திருக்கிறார்கள். அதன் ஒரு ஒளிக் கதிராக அவர்கள் குழந்தைகளைக் கொண்டு குழந்தைகளுக்கு நீதியைப் புகட்டுதற்கு ஏற்ற வகையில் எடுத்த 'ஹம் பஞ்ச் ஏக் டால் கே' என்ற இந்திப் படம் ஜனாதிபதியின் பரிசினைப் பெற்றது.

செட்டியார் அவர்கள் நடத்துகின்ற நிறுவனங்களில் வடபழனி அச்சகம் ஒன்று. புதுமை அச்சுக் கலைக்கு அது ஒரு பொன்னான இடமாக விளங்கி வருகிறது.

செட்டியார் அவர்சளுக்கு இணையாகத் திரைப்படத் துறையில் புதுமுகங்களையும்தொழில் நுட்பக் கலைஞர்களையும திரைப்பட உலகிற்குத் தந்தவர்கள் இல்லை என்றே சொல்லலாம்.

இன்று அந்த உலகத்தில் தனிப் பெரும் சுடராக விளங்குபவர்களில் பலர். செட்டியார் அவர்களின் கலைப் பள்ளியில் உருவானவர்களே!

செட்டியார் அவர்கள் தம்முடைய படப்பிடிப்பு நிலையத்தை ஒரு கல்வி நிலயம் போலவே

நடத்தி வருகிறார்கள். எங்கும் தூய்மை, அழகு, அயர்ச்சியற்று இயங்கும் தன்மை, அன்பு - மரியாதை இவையே நீக்கமற நிறைந்திருக்கின்றன.

அந்தக் கல்லூரியின் தந்தையாகவும் தலைவராகவும் மட்டுமல்லாமல் முதல்வராகவும் (Principal) செட்டியார் அவர்கள் விளங்குகிறார்கள்.

செட்டியார் அவர்கள் நிர்வாகத் துறையில் மிகவும் கண்டிப்பானவர்கள். ஆனால் அந்த உரிமை தனக்கே உரியது என்று எண்ணாதவர்கள். அவரவர்கள் பணியில் அவரவர்கள் கண்டிப்பாகவும் கடமை உணர்வோடும் பணியாற்ற வேண்டும் என்று எண்ணுபவர்கள்; மற்றவர்களையும் எண்ணச் செய்பவர்கள்.

அவர்களிடம் பணி புரிந்த எவரும் சோடை போனதில்லை.

அந்நியச் செலாவணியால் நம் நாட்டிற்கு ஏற்படுகின்ற சிரமங்களை உணர்ந்த செட்டியார் அவர்கள் அந்நியச் செலாவணி இடர்ப்பாடு அற்ற முறையில் அதாவது இந்தியப் பணத்தைக் கொண்டே வாங்கத் தக்க வகையில் கிழக்கு ஜெர்மனியில் தயாராகும் 'ஆர்வோ' என்ற பிலிம் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு இந்திய நாட்டு விற்பனை உரிமையினைப் பெற்றார்கள். எதைச் செய்தாலும் பிறர் வியக்கத்தக்க பெரிய காரியங்களையே செட்டியார் அவர்கள் செய்வார்கள் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாக விளங்குகிறது.

ஏ. வி. எம். அவர்கள் கலைத் துறையிலும், தொழில் துறையிலும் மட்டுமல்லாமல் அறத் துறையிலும் மிகச் சிறந்த செயல்களைச் செய்திருக்கிறார்கள். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பதே அவர்கள் எண்ணம் ஆகும். அறச்செயல்களுக்காக அவர்கள் தமது வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி ஏ. வி. எம். சாரிட்டிஸ் என்ற பெயரில் ஓர் அமைப்பினை நிறுவியுள்ளார்கள். அந்த அமைப்பிலிருந்து உருவாக்கப்பட்ட ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் இன்று சென்னை நகரக் கல்யாண மண்டபங்களுக்கெல்லாம் தலைவி போலப் புகழ் பெற்று விளங்குகிறது. ஏ. வி. எம். அவர்கள் தம் தந்தையார் ஆவிச்சிச் செட்டியார் அவர்கள் பெயரால் நிறுவி உள்ள உயர்நிலைப் பள்ளி சென்னை வடபழநியில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்று வருகிறது.

ஏ. வி. எம். அவர்கள் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதை விட, எதையும் செம்மையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். ஏனென்றால் செம்மையாகச் செய்தால் அந்தச் செயல் தானே சிறப்பைப் பெற்று விடுமல்லவா? அவர்களுடைய நன் முயற்சிகளுக்கெல்லாம் அவர்களுடைய புதல்வர்கள் உற்ற துணையாக இருந்து வருகிறார்கள்.

ஏ. வி. எம். அவர்கள் தயாரிக்கின்ற படங்களில் எப்பொழுதும் பாட்டுக்கள் சிறப்பாக அமையும். புதுமையான மெட்டுக்களில் பாட்டுக்களை அமைக்கச் செய்து படத்தின் வெற்றிக்குப் பாடல்களையும் பயன் படுத்திக் கொள்கின்ற ஆற்றல் அவர்களுக்கு என்றும் உண்டு. அப்படிப் பட்டவர்கள் பாட்டே இல்லாத படம் ஒன்றை எடுத்தார்கள் என்பது நமக்கு பெரும் வியப்பைத் தருகிறது. பாட்டு இடம் பெறாது அவர்கள் எடுத்த "அந்த நாள்" படம் திரை உலகில் அவர்கள் புதுமைகளைப் புகுத்த வேண்டும் என்பதில் எல்லையற்ற ஆர்வம் உடையவர்கள் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு! இந்தப்படம் அரசினரின்

பரிசினைப் பெற்றுப் பெருமை தேடித் தந்தது.

இசை மனித குலத்திற்த ஒப்பற்ற பெருந்துணையாகும். இசைக்கு இசையாதவர்கள் யாரும் இல்லை. எனவே இசைத் தட்டின் இன்றியமையாமையை உணர்ந்த ஏ. வி. எம் அவர்கள் இசைத்தட்டுக்களை உருவாக்கவும் விநியோகிக்கவும் சரஸ்வதி ஸ்டோர்ஸ் என்ற நிறுவனத்தைத் தொடங்கியதுடன் கொலம்பியா என்ற பெயரில் வெளிவரும் இசைத் தட்டுக்களைத் தென்னகமெங்கும் விற்பனைச் செய்யும் உரிமையினைப் பெற்று மிகவும் புகழ் உடையதாக ஆக்கினார்கள்.

திரைப்படத் துறை என்பது கலை மட்டுமல்ல அது நாட்டின் வளத்தையும் கலையையும் வளர்க்கத் தக்க பெரியதொரு சாதனம் என்பதை நாட்டிற்கு உணர்த்திய பெருமக்களில் ஏ.வி.எம். அவர்கள் முதல் மகனாகத் திகழ்கிறார்கள்.

கலைத் துறையில் அவர்கள் ஆற்றியுள்ள பணிகள் எண்ணற்றவை ஆகும்.

கலை ஆர்வம், புதுமை நோக்கம் சலியாத முயற்சி அயராத உழைப்பு செம்மையான செயல்கள் இவையெல்லாம் ஒருங்கிணைந்த ஒப்பற்ற பெருமகனாக ஏ. வி. எம். விளங்குகிறார்கள்.

கலைத் துறையிலும் சரி ஏனைய துறைகளிலும் சரி முன்னேற்றமடைய விரும்பும் இளைஞர் உலகிற்கு ஏ.வி.எம். அவர்களை விடச் சிறந்த உதாரணம் காட்டுதல் அரிது.

வாழ்க ஏ. வி. எம். அவர்கள்

வளர்க அவர்களின்
நன்முயற்சிகள்.

காரணம் என்ன ?

ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக்கூடாது என்று ஒரு பழமொழி உண்டல்லவா? நாம் ஊரைச் சொல்லாமல் பேரைச் சொல்லுவோம்.

ஓர் ஊரில் வெள்ளையன் செட்டியார், கருப்பன் செட்டியார் என்று இருவர் வாழ்ந்துவந்தார்கள். அவர்களுடைய பெயரில் தான் வெள்ளையும் கருப்பும் இருந்ததே தவிர அவர்கள் மனத்தில் இருந்ததென்னவோ வெள்ளைதான் !

இருவரும் இளமை முதலே நல்ல நண்பர்கள் ! அவர்கள் பல தொழில்களைக் கூட்டாகச் செய்து வந்தார்கள். நாளடைவில் ருவரும் நல்ல செல்வந்தர்கள் ஆனார்கள். இருவரும் கூடிக் கலந்து பேசிப் பெரிய இடம் ஒன்றை விலைக்கு வாங்கி அதில் அடுத் தடுத்து இரண்டு வீடுகளைக் கட்டினார்கள். பின் பகுதியில் அதாவது தோட்டத்திற்கு என்று ஒதுக்கிய பகுதியில் அருகருகே நேருக்கு நேர் கிணறுகளை அமைத்தார்கள். சுருங்கச் சொன்னால் இரு வீட் டிற்கும் இடையே அமைக்கப்பட்டிருந்த கட்டைச் சுவர் அருகில் நின்றே மறு வீட்டுக் கேணியைப் பார்க்கும்படியாக அவ்வளவு அருகருகே கேணிகள் அமைந்திருந்தன.

“எல்லார் வீட்டுக் கிணறுகளிலும்தான் தண்ணீர் ஊறுகிறது! என்ன பயன்? கருப்பன் செட்டியார், வெள்ளையன் செட்டியார் வீட் டுக் கிணறுகளில் கருப்பஞ்சாறு அல்லவா ஊறுகிறது.” என்று ஊரார் பேசிக் கொண்டார்கள்! அவர்கள் பேசிக் கொண்டதென் னவோ முழு உண்மைதான். தண்ணீர் அவ்வளவு சுவையாகத்தான் இருந்தது.

இரு வீட்டாரும் குடி தண்ணீருக்குக்கூட ஊருணிக்குச் செல்வ தில்லை. அவர்கள் என்ன? அருகிலிருந்த வீட்டார்கள் கூட இவர்கள் வீடுகளில் தான் வந்து குடிப்பதற்குத் தண்ணீர் எடுத்துச் செல்லத் தொடங்கினார்கள் !

இந்த நிலையில் கோடைக்காலம் வந்தது. சூரிய பகவான் தம் முடைய ஆற்றலைக் காட்டத் தொடங்கினார். போட்ட வெயிலில் செடி கொடிகள் கருகிவிட்டன. மரங்கள்கூட பசுமைமாறிக் காணப்பட்டன. நெற் பயிர்கள் கதிர் விடுவதற்கு முன்னரே வைக்கோலாக மாறின. ஏரி குளங்கள் எல்லாம் வெற்றிடமாகக் காட்சித்தரத் தொடங்கின. இந்த நிலைமை நேர்ந்த பிறகு ஊருணி மட்டும் வற்றாமல் இருக்குமா என்ன? வற்றிவிட்டது. வரண்டு விட்டது !

ஊரார் உண்ணும் நீருக்கு ஊருணியை நம்பியதை விட்டு விட்டுக் கருப்பன் செட்டியார் வெள்ளையன் செட்டியார் வீட்டுக் கிணறுகளை நம்பத்தொடங்கினார்கள். தண்ணீர்த் தருமம் தலையான

தருமம் என்று எண்ணி இரு செட்டியார்களும் அவர்கள் வந்து தண்ணீர் எடுப்பதைத் தடுக்காமல் விட்டுவிட்டார்கள்.

ஆனால் விரைவிலேயே, அவர்கள் இருவரும் தமக்கு மிஞ்சித் தான் தானதருமம் என்பதை உணரத்தொடங்கினார்கள். போட்ட வெயிலில் அந்தக் கிணறுகளில் தண்ணீர் ஊறுவது குறைந்தது. அந்த நிலைமையில் ஊரார்வந்து தண்ணீர் எடுத்தால் என்ன ஆகும்.? தண்ணீர் மறைந்து கிணற்றுத் தரை தெரிய ஆரம்பித்தது !

இருவரும் சுதாரித்துவிட்டார்கள். சொல்லியும் சொல்லாமலும் வெளியிலிருந்து தண்ணீர் எடுக்க வருபவர்களை நிறுத்தினார்கள். ஆனாலும் சில நாட்கள் இரு கேணிகளும் உரியவர்கள் தேவைக்குத் தண்ணீர் தந்து பின் அதற்கும் ஒத்துழைக்க மறுத்தன.

கருப்பஞ் செட்டியார் வெள்ளையன் செட்டியார் இருவரும் இது பற்றிக் கலந்து பேசினார்கள்.

"தண்ணி இல்லாம என்னங்கிறேன் பண்றது.? அம்புட்டுப் பேரும் தண்ணி பாலுமாதிரி இருக்கு, தேனுமாதிரி இருக்குண்ணு சொல்லி கண்ணுபட்டுப்போச்சுங்கிறே—இப்போத் தரைதானே தெரியுது" என்று கருப்பஞ் செட்டியார் கூறினார்.

"அதனாலே என்னண்ணே! நம்ம ஒட்டப் பசங்களைக் கூப்பிட்டு இன்னங் கொஞ்சம் தோண்டிட்டாப் போகுது" என்று வெள்ளையன் செட்டியார் கூறினார்.

மறுநாளே கிணறு வெட்டும் தொழிலாளர்கள் வந்தார்கள். முதலில் கருப்பன் செட்டியார் வீட்டுக் கிணறு வெட்டும் வேலை தொடங்கியது. அவர் விருப்பப்படியே இரண்டு அடி வெட்டினார்கள்.

அதன்பின்னே வெள்ளையன் செட்டியார் வீட்டுக் கிணறு வெட்டும் வேலை தொடங்கியபோது மறுபடி மறுபடி வெட்டாமல் ஒரு சமயம் வெட்டிவிடுவது நல்லதல்லவா என்று எண்ணிய அவர் மூன்றடி வெட்டும்படி கூறினார்.

கிணறு வெட்டும் வேலை முடிந்தது. மறுநாள் இரு செட்டியார்களும் வந்து கிணறுகளைப் பார்த்தார்கள். வெள்ளையன் செட்டியார் வீட்டுக் கிணற்றில் மட்டும்தான் தண்ணீர் இருந்தது. காரணம்? கிணறுகள் அருகருகே இருந்ததால் ஓர் அடி அதிகம் வெட்டிய கிணற்றில் கசிவு நீர் அதிகம் வரத்தொடங்கிவிட்டது. ஒரு கிணற்றில் மட்டுப் தண்ணீர் ஊறியதற்கு இது தான் காரணம் என்று வெள்ளையன் செட்டியாருக்கே முதலில் தோன்றவில்லை.

"வெட்டின வரையிலே ஊத்துக் கண்ணு இல்லேபோலே இருக்குங்கிறேன். ஒட்டப்பயல்களை வரச்சொல்லி இன்னும் கொஞ்சம் வெட்டச்சொல்ல வேண்டியதுதாங்கிறேன்' என்று கருப்பஞ் செட்டியார் கூறினார்.

'மீண்டும் கிணறு வெட்டும் தொழிலாளர்கள் வந்தார்கள். அவர்கள் வேலையை ஒழுங்காகச் செய்யவேண்டும் என்பதற்காக,

"என்னடா வெட்டி முறிச்சிட்டீங்க—ஒரு கெணத்திலே தண்ணி வருது இன்னெரு கிணத்திலே தண்ணிவல்லே!" என்று பொய்க் கோபத்தோடு அவர் சீறினர்.

"அந்தக் கிணத்துலே ஒரு அடி கூட வெட்டியிருக்கு சாமி—தண்ணி வராதா பின்னே!" தொழிலாளி கூறினன்.

"ஒரு அடி அதிகமா வெட்டியிருக்கா! ஆச்சரியமா இருக்கே! வெள்ளையஞ் செட்டி ஒருவார்த்தை நம்மகிட்டேச் சொல்லலியே! சரி விட்டுத்தள்ளு" என்று தனக்குள் எண்ணியவர் கட்டைச் சுவருக்கு அருகே நின்ற வெள்ளையன் செட்டியாருக்குக் கேட்கும்படியாக "டேய் ஒரு அடி வெட்டுங்கடா" என்று கூறியவர் தொழிலாளியைத் தனியாக அழைத்து இரண்டு அடி வெட்டும்படியாகக் கூறினர்.

அவ்வாறே அவர்கள் வெட்டி முடித்தார்கள். இப்பொழுது கருப்பஞ்செட்டியார் வீட்டுக் கிணற்றில் நீர் நிறையத் தொடங்கியது.

இது என்னடா மாயமாக இருக்கிறது. என்று எண்ணிய வெள்ளையன் செட்டியார் தொழிலாளர்களை அழைத்துக் காரணம் கேட்டார். அவர்கள் ரகசியக் குரலில் 'முன் உங்கள் கிணறு ஒரு அடி ஆழம்கூட இருந்தது; தண்ணீர் வந்தது; இப்பொழுது அடுத்த வீட்டுக் கிணறு ஒரு அடி ஆழம்கூட இருக்கிறது; எனவே தண்ணீர் வருகிறது' என்பதை விளக்கினர்கள்.

வெள்ளையன் செட்டியார் என்ன செய்வது என்று தெரியா திருந்தபோது கருப்பஞ் செட்டியார் உறவினர் வீட்டுக் கல்யாணத் திற்குப் புறப்பட்டு வெளியூர் சென்றார். வரப் பத்துநாட்கள் ஆகும் என்பதை அறிந்துகொண்ட வெள்ளையன் செட்டியார் தொழிலாளிகளை அழைத்து மேலும் இரண்டடி வெட்டச் செய்தார். வெட்டிய சுவடு தெரியாமல் செய்துவிட்டார். ஊரிலிருந்து கருப்பஞ்செட்டியார் வந்தபோது மறுபடியும் கதை மாறிவிட்டதை அறிந்தார்.

தொழிலாளிகளை அழைத்துக்கேட்டார். அவர்கள் மெல்லக் காதைக் கடித்துவிட்டார்கள். அவர்களுக்கு என்ன? வெட்ட வெட்டப் பணம்!

"வரட்டும் இந்த வெள்ளையன் செட்டி எங்காவது ஊருக்குப் போகாமலா இருப்பான்? அப்பொழுது நான் சும்மா இருந்துவிடுவேனு மூன்றடியாக வெட்டி விடுகிறேன்" என்று கருப்பன் செட்டியார் கருவிக்கொண்டிருந்தார்.

"கருப்பன் செட்டியார் மறுபடியும் வெட்டினுல் நாமும் இரண்டடி கூட வெட்டவேண்டியதுதான், தண்ணீர் இல்லாமல் என்ன செய்வது", என்று வெள்ளையன் செட்டியார் நினைத்தார். இருவரும் முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டார்கள்.

இந்த நிலையில் இருவரும் கிணறு வெட்டும் திட்டத்தை அடியோடு கைவிட்டார்கள்.

காரணம் என்ன? உங்களுக்குத் தெரியாவிட்டால் 26ஆம் பக்கம் பாருங்கள்!

கவிதைப் பூங்கா

காத்திட வருவார் யாரே?

மானகிரி ஆ. முருகப்ப செட்டியார்

அலைகடல் சுழலைத் தாண்டி அந்நிய நாடு போந்தோம்
மலைவளர் சாதி மாந்தர் மறுமொழிக் கடார மக்கள்
நிலையினுக் கேற்றார் போல நெகிழ்ந்துநல் நேசம் பூண்டு
மலையெனச் செல்வ மீட்டி மாண்பொடு வாழ்ந்தோ மந்நாள்!

மற்றவர் நாடு வந்தும் மனோநிலை உயர்வான் வேண்டி
நற்றவ நெறிமேற் கொண்டு நலம்பல கருத்தி லுன்னி
வெற்றிவேற் கடவு ளுக்கு விரிந்தநல் லால யங்கள்
சுற்றுலா வெள்ளித் தேர்கள் சுபவிழாப் பலவும் செய்தோம்!

கல்விக்கும் உதவ லானோம் கனித்தமிழ் பரப்ப லுற்றோம்
நெல்லுக்கும் உதவ லானோம் நெறிமுறைக் கடைப்பிடித்தோம்
மல்லுக்குப் பயந்து நின்றே மனம்பதை பதைத்து வேற்றூர்
தொல்லைக்குத் தாங்கொ ணாது சொந்தவூர் திரும்ப லானோம்!

பிழைப்பற்றுச் சொத்தை விட்டுப் பித்தர்போல் வீடு சேர்ந்தோம்
மழைத்தட்டின் பயிர்கள் போன்று மனைமக்கள் வாட்டங்கண்டோம்
இளைத்தவிந் நேரந் தன்னி லேங்குவார் மணப்பெண் மக்கள்
களைத்துநாம் கலங்கு கின்றோம் காத்திட வருவார் யாரே?

நனிபுகழ் நகரத்தார்

அரு. இலக்குவன், பி. ஏ., பி. எல்.

மா நில மிசையே மன்புகழ்ப் பெருமை
மருவிய வளமை பொருந்திய இந்திய
நாட்டின் தென்பால் நனிசிறப் புற்ற
பாண்டிநன் ஞட்டில் பழம்பெரும் பகுதியாய்
அமைந்த நாட்டில் அருமைச் சைவம்
உயிரெனக் கொண்டு உயர்பணி புரிபவர்
கற்றளி நிறுவிக் கண்போற் புரப்பவர்
திரைகட லோடிச் செல்வந் தேடுவோர்
வாணிகம் பேணி வளர்பொருள் ஈட்டுவோர்
கலைபல வளர்த்தலில் நிலையாம் பணிபல
உலைவிலா தியற்றி உயர்ந்து விளங்குவோர்
அறம்பல செய்ய அளவிலா நிலையம்
திறம்பெற அமைத்துச் செவ்விய நெறியில்
சாலச் சிறந்த தக்க பணிகள்
ஏலவே புரிந்தே ஏருறத் திகழ்வோர்
செட்டுடன் வாழ்க்கை செவ்விதின் நடாத்திப்
பெட்புறு செல்வம் பேணும் மரபினர்
தேனினும் இனிய தேவா ரத்திலும்
வானின் மிகுதிரு வாச கத்தினும்
அளவிலாப் பக்தி உளமிசைக் கொண்டோர்
சிவநெறி பிறழாச் சீரிய வாழ்க்கை
நல்ல செயல்பல நாளும் புரியும்
வல்ல கரத்தை மாணவே கொண்ட
நல்லியல் பதனல் நகரத் தாரென
சொல்லப் பெற்ற தூய பெயரினா
நாடு சிறக்க நற்பணி செய்தலில்
பீடுறப் புரியும் பெருமையர் இவர்போல்
பண்டும் பிறர்இலர் பாரினில் இனியும்
தோன்றுவர் பிறர்இலர் என்னச் சொல்லின்
நகரத் தாரின் நனிபுகழ்ச் சிறப்பு
நவிலும் தரத்ததோ நானிலத் தோரே!

வளம்பெறு வாய்ப்புக்கள்

நம் நாட்டில் உள்ள பல பல்கலைக் கழகங்களின் பல்வேறு பிரிவுகளில் ஆராய்ச்சி மற்றும் பிஎச்.டி. பட்டப் படிப்புக்களை மேற்கொள்ளும் மாணவர்களுக்குப் பல்கலைக்கழக மான்யக் குழு உதவிச் சம்பளம் வழங்குகின்றது. அதன் முழு விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன. பலரும் இப் பிரிவுகளில் சேர்ந்து பயன் பெறுவார்கள் எனப் பெரிதும் நம்புகிறோம்.

Under a U. G. C. Scheme of the Centres of Advanced Study, a small number of National Scholarships, Research Scholarships and Research Fellowships are available in the departments racognised as Centres of Advanced Study, to enable meritorious students to undertake post-graduate courses in the subjects concerned or to work for a Ph. D. degree. The Centres have been requested to entertain applications on an all-India basis and to award atleast half the number of the scholarships and fellowships available to students coming to these Centres from other Universities. Students desirous of pursuing further studies/research in the departments listed below may write direct to the Heads of the Centres concerned for obtaining necessary information for seeking admission during the acadamic year 1969-70.

UNIVERSITY & ADDRESS	MAJOR FIELD OF SPECIALISATION
1. Department of Marine Biology, Annamalai University, Porto Novo (South-India).	Marine Biology
2. Department of Mathematics, University of Bombay, 164, Backbay Reclamation Road, No. 3, Bombay-1.	Pure Mathematics


3.	Department of Chemical Technolgy, University of Bombay, Matunga Road, Bombay-19.	Applied Chemisty
4.	Department of Applied Mathematics, University of Calcutta, 92, Acharya Prafulla Chandra Road, Calcutta-9.	Applied Mathematics
5.	Institute of Radiophysics & Electronics, 92, Acharya Prafulla Chandra Road, Calcutta-9	Radiophysics & Electronics
6.	Department of Physics University of Delhi, Delhi-7	Theoretical Physics
7.	Department of Chemistry, University of Delhi, Delhi-7	Chemistry of Natural Products
8.	Department of Botany, University of Delhi, Delhi-7	Plant Marphology & Embryology
9.	Department of Zoology, University of Delhi, Delhi-7	Cell Biology & Endocrinology
10.	Department of Bio-chemistry Indian Institute of Science, Bangalore-12.	Proteins, Lipids & Vitamins
11.	Department of Physics, University of Madras, (A. C. College Bldgs) Madras-25.	Crystallography & Biophysics
12.	Department of Botany, University of Madras, Madras-5	Plant Pathology & Mycology
13.	Ramanujam Institute for Advanced study in Mathematics, University of Madras, Madras-5	Pure Mathematics
14.	Department of Astronomy, Osmania University, Hyderabad-7.	Astronomy
15.	Department of Geology, Punjab University, Chandigarh-14	Himalayan Geology & Palaeontology

16. Department of Mathematics, Punjab University, Chandigarh-14	Pure Mathematics
17. Deparment of Geology, University of Saugar, Sagar	Structural Geology & Geomorphology
18. Department of History, Aligarh Muslim University, Aligarh.	Medieval Indian History
19. Department of Linguistics, Annamalai University, Annamalai nagar (South India)	Dravidian Linguistics
20, Department of Education, M. S University of Baroda, Baroda-2.	Education
21. Department of Philosophy, Banaras Hindu University Varanasi-5	Indian Philosophy
22. Department of Economics, University of Bombay, Bombay-1.	Public Finance & Industrial Economics
23. Department of Ancient Indian History and Culture, University of Calcutta, 51/2, Hazra Road, Calcutta-19.	Ancient Indian History & Culture
24. Department of Economics, Delhi School of Economics, University of Delhi, Delhi-7	Economic Development & Economic History
25. Department of Sociolgy University of Delhi, Delhi-7.	Sociology
26. Department of Philosophy, University of Madras, Madras-5.	Advaita & Allied systems of Philosophy
27. Department of Economics, Gokhale Institute of Politics & Economics, Poona-4.	Agricultural Economics
28. Department of Linguistics, Deccan College Post-graduate and Research Institute, Poona-6.	Applied Linguistic

நகரத்தார் கடிதநடை

சுப. திண்ணப்பன் எம்.ஏ., எம்.லிட்

[திரு. சுப. திண்ணப்பன் அவர்கள் தேவகோட்டையைச் சேர்ந்தவர். இளமை முதலே கல்வி கற்பதில் பேரார்வம் உடையவர். 1959-ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ. பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற அவர்கள் 1962-ம் ஆண்டு அண்ணுமலைப்பல்கலைக் கழகத்தில் மொழியியல் கல்வியில் (Diploma in Linguistics) முதல் வகுப்பில் தேர்வு பெற்ருர்கள். 1965-ஆம் ஆண்டு பழமொழி நானூற்றின் மொழி அமைப்பு என்ற தலைப்பில் ஆய்வு நூலினை எழுதி எம். லிட் (M litt) பட்டம் பெற்ருர்கள். 1959-60-ம் ஆண்டில் அதிராம்பட்டணம் காதர் மொகைதீன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிப் பின்னர் மொழியியல் துறையில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிருர்கள். டாக்டர் பட்டம்பெறும் பொருட்டு சிவக சிந்தாமணி மொழி அமைப்பு என்ற தலைப்பில் ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளார்கள். அதோடு வட்டார மொழி ஆய்வுத் திட்டத்தின்கீழ் செட்டி நாட்டுத் தமிழ் என்ற தலைப்பில் ஆராய்ச்சியினை மேற்கொண்டுள்ளார்கள். 1957-58ஆம் ஆண்டில் சென்னை நகரத்தார் சங்கச் செயலாளராகப் பணி



யாற்றியுள்ளார்கள். தென்ஞற்காடு மாவட்ட நகரத்தார் சங்கச் செயலாளராக இப்பொழுது விளங்கி வருகிருர்கள்.]

“கடிதம் என்பதுஎழுதுவோரின் இயல்பையும் எண்ணத்தையும் பண்பாட்டையும் நாகரிகத்தை யும் எடுத்து விளக்கும் கண்ணுடி” என்பர் அறிஞர். அதற்கேற்ப நக ரத்தார்கள் கடிதம் எழுதும் முறை, அவர்கள் தம் கடிதம் காட் டும் மொழி நடை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைக் காண் பதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

கடிதத்தைக் குறிக்க ஓலை, தபால், கடதாசி, லெட்டர் என்ற சொற்களைச் செட்டி நாட்டுத் தமிழில் காணலாம். குன்றக்குடி யில் தைப் பூச நன்னுளில் காவடி கள் அன்னதான மடத்திலிருந்து புறப்படுவதற்கு முன்னர் அண் மையில் உள்ள நகரத்தார்கள் ஊர்களிலிருந்து காவடிகள் வரு கின்றனவா இல்லையா என்று அறிய அந்த ஊர்களிலிருந்து “ஓலை வரவேண்டும்” என்று குறிப் பிடுவர். ஒருவனின் இறப்புச் செய் தியை அடுத்த ஊருக்கு அறிவிப் பதை “ஓலை விடுதல்” என்று அழைப்பா ஓலையில கடிதம் எழு தப்பட்ட காரணத்தால் கடிதத் தையே ஓலை எனக் குறித்தனர். இசை குடிமானம், சுவிகாரமுறி, யொய்ப்பண விபரம் முதலிய வற்றை இன்றும் நகரத்தார்கள் ஓலையில் எழுதி வருகின்றனர். ஓலை என்ற சொல்லே நகரத்தார் கடிதத்தைக் குறிக்க வழங்கிய பழைய தமிழ்ச் சொல்லாகும். தபால் என்ற சொல் உருது மொழியைச் சார்ந்ததாகும். கட தாசி என்ற சொல் கடிதங்கள் மிகுதியாகத் தாளில் எழுதப் பட்ட காலத்திற்குப் பின்னர் வழங்கத் தொடங்கிற்று. கடதாசி என்ற சொல் (Cartaz) என்ற போர்த்துக்கீசியச் சொல்லி லிருந்து தோன்றிய ஒன்றாகும். லெட்டர் என்பது (Letter) என்ற ஆங்கிலச் சொல்லே ஆகும். இப் போது செட்டியார்கள் பேச்சில் இச்சொல்லே பெரு வழக்கமாக இடம் பெற்றிருக்கக் காணலாம். இவ்வாறு கடிதத்தைக் குறிக்க வழங்கும் ஓலை, தபால், கடதாசி, லெட்டர் என்ற சொற்கள் நான் கும் முறையே இந்நாட்டில் நில வியதமிழர், மகமதியர், போர்த்து கீசியர், ஆங்கிலேயர் ஆட்சியை நினைவுபடுத்துகின்றன போலும்! அத்துடனன்றி அயலார் மொழிச் செல்வாக்கு நகரத்தார் தமிழில் எங்ஙனம் ஊடுருவியுள்ளது என் பதனையும் ‘மன்னர் பின்னேர்’ ‘மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ் வழி’ என்ற பொன் மொழி களுக்கு ஏற்ப ஆட்சியாளர்களின் போக்கையும் மொழியையும் அனுசரித்துத் தழுவிச் செல்லும் அவர்களின் இயல்பையும் நாம் நன்கு அறியலாம்.

கிணறு வெட்டும் திட்டத்தை இருவரும் அடியோடு கைவிட்டதற்குக் காரணம் ?

இருவர் வீட்டுக் கிணறுகளிலும் தண்ணீர் மழமழவென்று ஊறத் தொடங்கியது. இதற்குக் காரணம் உங்களுக்கு நிச்ச யமாகத் தெரியும் என எண்ணுகிறேம்.

தெரியவில்லையென்றல் 39-ஆம் பக்கம் பாருங்கள்.

உ

சிவமயம்:

கடிதத்தைத் தொடங்குவதற்கு முன், தாளின் உச்சியில் நடுவில் "உ" என்ற பிள்ளையார் சுழி போடுவதும் பின்னர் அதன் கீழ்ச் "சிவமயம்" என்று எழுதுவதும் நகரத்தார்கள் என்றும் வழுவாது போற்றும் நல்லியல்புகள் ஆகும். எக்காரியத்தைத் தொடங்கினாலும் அக்காரியம் தடையின்றி இனிது நிறைவேற எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வழிபடுவதற்கு நகரத்தார் உள்ளம் நாடும் என்பதை உ (பிள்ளையார் சுழி) உணர்த்தும், பிள்ளையார் சுழியின் பெருமை பேசுதற்கு அரியது. பின்னர் வரும் "சிவமயம்" என்பதோ நகரத்தார்கள் வழி வழிச் சைவர்கள் என்பதையும் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரமசிவனை அவர்கள் அகத்தே அயராது எண்ணும் இயல்பினர் என்பதையும் அறிவிக்கும்.

இப்போது நாட்டரசன்கோட்டைப் பகுதியில் நகரத்தார்கள் சிலர் 'உ' போட்டு அதன் கீழ் ஸ்ரீ ராமஜெயம் என்று எழுதுகின்றனர். அரியக்குடியில் சீனிவாசப் பெருமாள் கோயில் நடுநாயகமாகவும் சிறப்பாகவும் அமைந்திருப்பதால் அவ்வூர் நகரத்தார் சிலரும் இவ்வாறு எழுதிக் கடிதத்தைத் தொடங்குகின்றனர்.

இழவுச் செய்தியைத் தெரிவிக்கும் கடிதங்களில் நகரத்தார்கள் 'உ' மட்டும்தான் எழுதுவர். சிவமயம் போடுவது வழக்கமில்லை.

கடிதத் தாளின் இடது பக்க ஓரத்தில் கடிதம் எழுதுவோரின் விலாசத்தை மேல் எழுதி, அதன் கீழ் அவர் இருக்கும் ஊரின் பெயரைக் குறிப்பதும் அவ்வாறே வலது பக்க ஓரத்தில் கடிதம் பெறுவோரின் விலாசத்தை மேல் எழுதி, அதன் கீழ் அவர் இருக்கும் ஊரின் பெயரைக் குறிப்பதும் நகரத்தார் மரபுகளாகும். சில சமயங்களில் ஊரின் பெயரை முன்னர் எழுதி அதன் கீழ் எழுதுவோர் அல்லது பெறுவோர் பெயரை எழுதுவதும் உண்டு. இப்போது கடிதங்களில் From to என்று போடுவது போன்ற அமைப்பாகும் இது. எழுதுவோரின் விலாசம், ஊர்ப் பெயர் முதலியன அடங்கிய இரப்பர் ஸ்டாம்பையும் பயன்படுத்துவது உண்டு.

வருஷம், மாதம், தேதி:

கடிதத்தின் முதல் வரியாக வருஷம், மாதம், தேதி இவற்றை முறையே எழுதுவர். தமிழ்த் தேதிதான் எழுதுவது நெடுநாளைய மரபாகும். செட்டியார்கள் செட்டாக வாழும் இயல்பினர் என்பதற்கேற்ப வருஷம், மாதம், தேதி என்பனவற்றை முறையே இ௵ அல்லது ஷ மீ, உ என்ற எழுத்து வடிவங்களினால் குறிப்பர். எடுத்துக் காட்டு:- கீலக ஷ சித்திரை மீ 15உ. இங்குள்ள தேதியின் எண்களைப் பழைய தலைமுறையினர் தமிழ் வடிவத்திலும் (௰௫உ 15) புதிய தலைமுறையினர் ஆங்கில வடிவத்திலும் எழுதுகின்றனர். இப்போது தமிழ்த் தேதியுடன் ஆங்கிலத் தேதி, மாதம் வருடம் (15-2-69) ஆகியவற்றையும் அடைப்புக் குறி கொடுத்து எழுதுகின்றனர். இவ்வியல்பு நகரத்தார்களின் பழைமையைப் போற்றும் பாங்கினையும் புதுமையை வரவேற்கும் போக்கினையும் இனிது உரைக்கின்றது.

எழுதியது, எழுதிக்கொண்டது:

அடுத்த வரியில் கடிதம் எழுதுவோரின் பெயருடன் "எழுதியது

இப்பவும்'' என்றோ "எழுதிக் கொண்டது இப்பவும்'' என்றோ எழுதுவது மரபாகும். (எடு:) "திண்ணப்பன் எழுதிக் கொண் டது இப்பவும்'' அல்லது "திண் ணப்பன்எழுதியதுஇப்பவும்.'' இச் சொற்றொடரை எடுத்தாளும் போக்கில் ஒரு பின்னணி இருப் பதை நாம் நன்கு உணர வேண்டும். கடிதம் எழுதியவர், கடிதம் பெறுபவரை விட வயதில் -நிலையில் சிறியவராக இருந்தால் தான் "எழுதிக் கொண்டது இப்ப வும்'' என்று கையாளலாம். அவ் வாறன்றிக் கடிதம் எழுதுவோர், கடிதம் பெறுபவரைவிட வயதில் -நிலையில் பெரியவராக இருந்தால் "எழுதியது இப்பவும்'' என்றே அமைதல் வேண்டும். முதலாளி தன் கடையத்தில் அலுவல் பார்க்கும் ஏஜண்டுக்குக் கடிதம் எழுதும் போது தன் பெயரைக் குறிப் பிடாமல் தன் விலாசத்தை மட்டும் குறிப்பிட்டு "எழுதியது இப்பவும்'' என்றே எழுதுவார். (எடு:) தி. எழுதியது இப்பவும். சில சமயங்களில் ஏஜண்டுக்கு அடுத்த ஆளுக்குக் கடிதம் எழுதும் போது அந்த ஆளின் பெயரைக் குறிப்பிடுவதும் உண்டு. (எடு:) "வீரப்பனுக்கு தி. எழுதியது இப் பவும்''. தத்தம் கடைகளுக்கு எழுதும் கடிதங்களில் பெறுவோர் விலாசம், கடை விலாசமாக (சில சமயங்களில் எழுதுவோர், பெறு வோர் விலாசம் ஒன்றாக) இருக் கும். ஊர்ப் பெயர்தான் வேறு படும்.

இவ்வாறு நகரத்தார்கள் கடி தம் பெறுவோரின் வரிசை அறிந்து சொல்லை வழங்கும் பண்பு என்றும் பாராட்டற்குரிய ஒன்றாகும்.

உபய க்ஷேமம்:

அடுத்து, 'இவடம் உபய க்ஷே மம். அவடம் க்ஷேமத்திற்கு எழுத வேண்டியது' என்று எழுதுவர். இங்கும் கடிதம் பெறுவோர் வய தில்-நிலையில் சிறியவராக இருந் தால் 'எழுத வேண்டியது'என்றும் பெரியவராக இருந்தால் 'எழு தச் செய்ய வேண்டியது' என்றும் எழுதும் வழக்கத்தை நகரத்தார் களிடையே காணலாம். சிலர் 'இவடம் சௌக்கியம். அவடம் சௌக்கியத்துக்கு எழுத வேண் டியது (எழுதச் செய்ய வேண் டியது)'' என்றும் எழுதுகிறார்கள். இவடம் அவடம் என்ற சொற் கள் இவ்விடம், அவ்விடம் என் பனவற்றின் திரிபுகளே ஆகும். இக்கால நகரத்தார் இளைஞர் களோ "நலம். நலம் அறிய விரும்புகிறேன்'' என்று நற்றமிழ்ச் சொற்றொடர் அமைக்கும் பெற்றி யர் ஆவர். (தொடரும்)

ஆச்சிகள் உலகம்

பெண் குலத்தின் கல்விச் சிறப்பைப் பொறுத்துத்தான் குடும்பப் பெருமையும் நாட்டின் முன்னேற்றமும் அமைகின்றன. அதனால் தான் ஆண்களுக்குச் சரிநிகர் சமமாகப் பெண்களும் உயர வேண்டும் என்று விடுதலைக் கவிஞர் பாரதியார் முழங்கினார்.

பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பது பொதுவாக அனைவருக்கும் பொருந்துவதுதான் என்றாலும் நம் மரபினருக்கு அது மிகவும் இன்றியமையாததாகும்.

எனவே நம் மரபுப் பெண்கள் உயர்ந்த முறையில் கல்வி கற்றுச் சிறந்த மதிப்பெண்களைப் பெற்றுத் தேர்வில் வெற்றி பெறுவதை நாம் அறிகின்ற பொழுது நமக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அதிலும் அப்பெண், பள்ளிக் கல்வி தவிர ஏனைய துறைகளிலும் புகழ் பெறுகிற போது நமக்கு எல்லையற்ற பெருமை ஏற்படுகிறது.

காரைக்குடியைச் சேர்ந்த பழ. கனகாம்பாள் அவர்கள் இத்தகைய பெருமைக்கு உரியவராக விளங்குகிறார்கள். அவர்கள் கோட்டையூர் சிதம்பரம் செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்று அண்மையில் நடைபெற்ற S. S. L C. தேர்வில் 444 மதிப்பெண் பெற்றுத் தேர்வு பெற்றிருக்கிறார்கள். கல்லூரியில் இடம் கிடைப்பது அரிதினும் அரிதாக இருக்கின்ற இத்தருணத்தில் சிறந்த மதிப்பெண் பெற்றிருப்பதால், கனகாம்பாள் அவர்களுக்குத் தகுதி காரணமாக ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியில் எளிதாக, P. U. C. கல்வி கற்க இடம் கிடைத்திருக்கிறது.

கனகாம்பாள் அவர்கள் மாணவர் மன்றத் தேர்வுகளில் கலந்து கொண்டு கட்டுரைப் போட்டியிலும் S. S. L. C. தமிழ்த் தேர்விலும் சிறப்பான முறையில் வெற்றி பெற்றுள்ளார்கள். அகில இந்தியப் பொது அறிவு நிறுவனத்தினர் (All India Institute of General Knowledge Education) நடத்தும் பொது அறிவுத் தேர்வில் 1967-ல் முதல் வகுப்பில் தேர்வு பெற்றுள்ளார்கள்.

இவர்கள் கவிதை எழுதுவதில் பேரார்வம் உடையவர்கள். இவர்கள், சென்னையில் உள்ள லூப்பிரிகேஷன் எக்குவிப்மென்ட் கம்பெனி உரிமையாளர், திரு A. பழனியப்பச் செட்டியார் அவர்களின் புதல்வி ஆவார்கள்.



தாலாட்டு

குழந்தைகளைத் தூங்கச் செய்யத் துணைபுரிவது! இது மட்டும் தானா? இல்லை!

அந்தப் பிஞ்சு உள்ளத்திலே பெருமைப்படத்தக்க கருத்துக்களை விதைப்பது.

இசையாய் இசைப்பயனாய் எழிலாய் இறைவன் திருவருளாய் விளங்குகின்ற பிள்ளைக் கனியமுதுக்கு இளமையிலேயே இசைச் செல்வத்தை ஊட்டுவது.

இந்தக் கலையில் நம் தாய்க்குலத்துப் பெருமக்கள் ஒப்பற்ற பெருமை பெற்றவர்கள். அவர்கள் இயற்கையாகப் பாடியவையெல்லாம் இன்று இலக்கியங்களாக விளங்குகின்றன.

நம் குலத்து இளம் பெண்களும் தாலாட்டுப் பாடல்கள் அறிந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பாடல் ஒன்றைக் கீழே தந்துள்ளோம்.

தென்னு தமிழ் வளர்த்த
  தென்னவராம் பாண்டியர்க்குப்
பிள்ளைக் கலிதீர்த்த
  பெருமானும் நீதானோ?
மாம்பழத்தைக் கீறி
  வயலுக்கு உரம்போட்டுத்
தேன்பாய்ந்து நெல் விளையும்
  செல்வமுளார் புத்திரனோ!
வெள்ளித் தேர்பூட்டி
  மேகம்போல் மாடுகட்டி
அள்ளிப் படியளக்கும்
  அதிட்டமுள்ளார் புத்திரனோ!
வாரிப் படியளக்கும்
  மகிமையுள்ளோர் புத்திரனோ!
சேற்றிலொரு செங்கழுநீர்
  திங்களொரு பூப்பூக்கும்
நூற்றிலொரு பூவெடுத்து
  முடிப்பார் மகனாரோ!
மதுரை இருகாதம்
  வாழ்மதுரை முக்காதம்
'ஐம்பத்தாறு தேசம்'
  ஆளவந்த சீமானோ!
பாட்டனு ராண்ட
  'பதினெட்டு ராச்சியமும்'
நாட்டமுட னாளவந்த
  ராசகுல நாயகமோ!
இன்னார் மகனோ
  இனியார் மருமகனோ?
தனதாய் விளையாடும்
  தமிழோ புனக்கிளியோ?
பொதுவாய் விளையாடும்
  புள்ளிமான் நித்திரைபோ!

பாடல்:
  தாலாட்டு என்ற நூலிலிருந்து-

தொகுப்பாசிரியர்:
  தமிழண்ணல்.

வெளியீடு:
  பாவை நிலையம்.

துயிலும் பெருமாளுக்கும் தாலாட்டு!

மாணிக்கம் கட்டி, வயிரம் இடைகட்டி,
ஆணிப்பொன்னால் செய்த வண்ணச்சிறு தொட்டில்
பேணி உனக்குப் பிரம்மன் விடுதந்தான்,
மாணிக்குறளனே! தாலேலோ!
வையம் அளந்தானே! தாலேலோ!

—பெரியாழ்வார்.



பொருளும் அருளும்

வைகாசித் திங்கள் இதழ் எண்ணத்தில் நகரத்தார் சங்கங்கள் புரிந்து வரும் நற்பணி குறித்து எழுதியிருந்தோம். அச்செய்திக்கு மேலும் சுவை ஊட்டுவது போல, எழுச்சி தரும் வகையில் ஈரோடு நகரத்தார் சங்கத்தார் நற்பணிகளை விரைவாகவும் விரிவாகவும் செய்வதற்கு ஏற்ற வகையில் பொருள் திரட்ட முற்பட்டு வெற்றி கண்டிருக்கிறார்கள்.

அந்த வெற்றிக்குரிய நிகழ்ச்சியை நாம் அறிந்து கொள்வதற்கு முன்னர் அச்சங்கத்தைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வது சுவையும் பயனும் நிறைந்ததல்லவா?


ஈரோட்டு நகரத்தார் சங்கம் 7-5-67ஆம் ஆண்டு துவக்கப் பெற்றதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக அச்சங்கம் சீரிய முறையில், பணிகள் பல புரிந்து வருகிறது.

பொருள் தேடுவதோடு அருளையும் தேடுகின்ற மரபு நம் மரபு. கடல் கடந்து சென்று தொழில் புரியும் இடங்களிலெல்லாம் கூடக் கோயில்கள் எடுத்து வழிபடும் பழக்க முடையவர்கள் நாம்.

ஈரோடு நகரத்தார் சங்கத்து உறுப்பினர்கள் ஒவ்வோர் ஆங்கில மாதமும் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று சங்கத்தில் ஒன்று கூடி இறைவழிபாடு நடத்தி வருகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்கும் பெருமிதத்திற்கும் உரியதாகும். பனையப்பட்டி சுப. அ குடும்பத்தினர் அனைவரிடத்தும் மிகுந்த அன்பும் அறவுணர்வும் கொண்டவர்கள். அவர்களுடைய மீனாட்சி அண் கோ என்ற நிறுவனம் இருக்கின்ற கட்டிடத்தில் சங்கம் இருப்பதற்கு இடம் தந்து உதவியுள்ளார்கள்.

சென்ற ஆண்டில் நூல்கள் வாங்குவதற்காக உயர் நிலைப் பள்ளி மாணவர் நால்வருக்கு 50 ரூ. வீதமும் கல்லூரி மாணவர் ஒருவருக்கு 125 ரூபாயும் உதவித் தொகையாகக் கொடுத்துள்ளார்கள்.

நிதி வளத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக அண்மையில் திரைப்பட நடிகை கலைச்செல்வி குமாரி சந்திரகாந்தா அவர்களின் கலை நிகழ்ச்சியினை நடத்திக் கணிசமான பொருள் சேர்த்திருக்கிறார்



சந்திரகாந்தா அவர்கள் உரையாற்றுகிறார்கள்.

அமர்ந்திருப்பவர்கள் : சேலம் மாவட்டப் பகுதி இந்தியன் வங்கிப் பொறுப்பாளர் உயர்திரு. ஏ. எல். அருணசலம் செட்டியார் அவர்கள் (கானாடுகாத்தான்) சேலம் ராஜேந்திரா மில் அதிபர் உயர்திரு. எம். எஸ். சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் (பூலாங்குறிச்சி) கோவை எல். எஸ். அன்கோ அதிபர் உயர்திரு எ. எல். சிங்காரம் செட்டியார் அவர்கள் (கண்டவராயன் பட்டி) ஈரோட்டு நாட்டுச்கோட்டை நகரத்தார் சங்கத் தலைவர் உயர்திரு. இ. மு. சுப. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் தேவகோட்டை)

கள். நகரத்தார் சமூகத்தின் அறப் பணிகள் குறித்தும் விருந்தோம் பும் பண்பு குறித்தும் குமாரி சந்திர காந்தா அவர்கள் பாராட்டிப் பேசினார்கள். நிகழ்ச்சி மூலமாக சேர்ந்த தொகையினை நிலையான நிதியாகக் கொண்டு நல்ல உதவி கள் பலவற்றைச் செய்யச் சங்கத் தார் திட்டமிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய இந்த நற்பணிக்கு நம்முடைய நல் வாழ்த்துக்களை உரிமையாக்குவோம்.

நல்ல நிகழ்ச்சி

பரதக்கலை தெய்வ அருள்பெற்ற கலை. பாவம், ராகம், தாளம் என்ற மூன்றும் ஒன்றுகின்ற போதுதான் அந்தக் கலை முழுமை பெறுகிறது.

பலர் இந்தக் கலையைக் கற்றுத் தேர்ந்தாலும், சிலரே முழுமை பெற்ற கலைஞர்களாக விளங்குகிறார்கள். அந்த அரிய வாய்ப்பினைத் திரைப்பட நடிகை குமாரி சரளா அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

அண்மையில் ராமாராவ் கலா மண்டபத்தில் நகரத்தார் கலைக் கழகத்தின் சார்பில் நடந்த அவர்களுடைய நடன நிகழ்ச்சி இதற்கோர் எடுத்துக் காட்டாக அமைந்தது.

நடன ஆசிரியை கே. ஜே. சரசா அவர்களும் அபிராமி அவர்களும் பதம் பாட நிகழ்ச்சி தொடங்கிற்று. குமாரி சரளா அவர்கள் நடனக் கலையில் மட்டுமல்லாமல் நடிப்புக் கலையிலும் கைதேர்ந்தவர்கள் என்பது பல்வேறு உணர்ச்சிகளை அவர்கள் இயற்கையாக வெளிப்படுத்தியதிலிருந்து மிகத் தெளிவாகத் தெரிந்தது. எல்லா நடன நிகழ்ச்சிகளிலும் குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளே இடம் பெறும். அந்த நிகழ்ச்சிகளை நாம் அடிக்கடி பார்க்கின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆயினும்



குமாரி சரளா

திறமை மிக்கவர்கள் அந்த நிகழ்ச்சிகளை நடத்துகிற பொழுது முற்றிலும் புதியதொரு நிகழ்ச்சியைப் பார்த்த நிலையை நாம் அடைகிறோம்.

பாம்பு நடனத்தின் மூலம் குமாரி சரளா அவர்கள் அந்த நிலையை உண்டாக்கினார்கள்.

குமாரி சரளா அவர்களின் எதிர்காலம் ஒளி மிகுந்ததாகத் திகழும் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஓர் எடுத்துக் காட்டாக அமைந்தது.

திரைப்பட நடிகைகளான பத்மினி, ராகினி, விஜய குமாரி, கனக துர்கா முதலியவர்கள் நிகழ்ச்சிக்கு வந்திருந்தது சிறப்பிற்கு மேலும் ஒரு சிறப்பாக அமைந்தது.

குமாரி சரளாவின் நடன நிகழ்ச்சிகள் நகரங்கள்தோறும் நல்ல விழாக்கள் தோறும் நடைபெற வேண்டும் என்பது நம் விருப்பமாகும். அதற்கு வாய்ப்பாக அவர்களுடைய முகவரியைக் கீழே தந்துள்ளோம்.

குமாரி சரளா

186, ஹாப் தெரு,

சி. ஐ. டி. காலனி,

சென்னை - 4.

செய்தி மலர்

● எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்று பாரதியார் கூறினர். எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள் தாம் என்றாலும் எல்லாராலும் போற்றப்படும் மன்னர்களாகச் சிலர் விளங்குகிறார்கள். அப்படிப் பட்ட மன்னர்களைக் கொண்ட குடும்பம் செட்டி நாட்டு அரசருடைய குடும்பம்.

செட்டி நாட்டு அரசர் மு. அ. மு. முத்தையா செட்டியார் அவர்களின் மூத்த புதல்வர் குமாரராஜா மு. அ. மு. முத்தையா செட்டியார் அவர்கள் 1929-ஆம் ஆண்டு செப்டம்பர் 6-ஆம் நாள் பிறந்தவர்கள். பச்சையப்பன் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்கள். 1953-ஆம் ஆண்டு முதல் 57ஆம் ஆண்டு வரை, தென்னிந்திய வர்த்தக சங்க நிர்வாகக் குழு உறுப்பினராகவும் 1957-ஆம் ஆண்டு முதல் 1959-ஆம் ஆண்டு வரை அதன் துணைத் தலைவராகவும், 1959-ஆம் ஆண்டு முதல் 1962ஆம் ஆண்டு வரை அதன் தலைவராகவும் இருந்துள்ளார்கள். 1962-ஆம் ஆண்டு முதல் 1968-ஆம் ஆண்டு வரை வர்த்தக சங்கத்தின் சார்பில் வி. பி. ஹால் காப்பாளர் குழுவில் அங்கம் வகித்துள்ளார்கள். 1965-ஆம் ஆண்டு முதல் 1968-ஆம் ஆண்டு வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகச் செனட் உறுப்பினராகவும் 1958-ஆம் ஆண்டு சென்னை மாநகர ஷெரீப் ஆகவும் பொறுப்பேற்றுப் பணியாற்றியுள்ளார்கள்.

தற்பொழுது செட்டிநாடு சிமெண்டு கார்ப்பரேஷன் லிமிடெட் நிர்வாக டைரக்டராகவும் மற்றும் இந்தியன் வங்கி, E. I. D. பாரி லிமிடெட், தி மெட்ராஸ் இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், உதகமண்டலம் ரேஸ் கம்பெனி லிமிடெட் முதலிய பல நிறுவனங்களின் டைரக்டராகவும் உள்ளார்கள். சென்னை ரேஸ் கிளப்பில் முக்கிய அங்கம் வகிக்கிறார்கள்.






● காரைக்குடியைச் சேர்ந்த திரு. எம். அருணாசலம் அவர்கள், உலக சமாதான மாநாட்டில் கலந்து கொள்ள இந்திய சமாதானக் குழுவின் பிரதிநிதியாக 19-6-69-ஆம் நாள் டெல்லியிலிருந்து தாஷ்கண்ட் வழியாகக் கிழக்கு ஜெர்மனிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்கள். மாநாடு கிழக்கு ஜெர்மனியிலுள்ள பெர்லின் நகரில் இம்மாதம் 21-ஆம்நாள்முதல் 28-ஆம் நாள் வரை நடைபெற இருக்கிறது. அருணாசலம் அவர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் சுற்றுப் பயணம் செய்து அந்நாடுகளில் உள்ள பொருளாதார, சமூக வளர்ச்சிகளை அறிந்து கொண்டுஜூலைத்திங்கள் தாயகம் திரும்ப உள்ளார்கள்.

● பள்ளத்தூர் ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் கோயில் குடமுழுக்கு விழா சௌமிய ஆண்டு ஆனித் திங்கள் 18-ஆம் நாள் (2-7-69) காலை மணி 9-10க்கு மேல் 9-54க்குள் நடைபெற இருக்கிறது. பள்ளத்தூர் நகரத்தார்கள் விழாவைச் சீரோடும் சிறப்போடும் நடத்தத் தக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள்.

● பள்ளத்தூர் சு. ராம. பழநியப்பச் செட்டியார் அவர்களின் மணிவிழா சௌமிய ஆண்டு வைகாசி திங்கள் 25-ஆம் நாள் (7-6-1969) மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு முதல் நாள் இரண்டாயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டது. விழா அன்று காலை 7 மணி அளவில் இரத்தின சபாபதி தேசிகர் குழுவினரின் தேவார இசை நிகழ்ச்சி நடைபெற்றது. 11 மணி அளவில் அறுபதாம் ஆண்டு நிறைவு குறித்த சிறப்பு நீராட்டு விழாவும் பிற்பகல் 2 மணி அளவில் பன்னிரு திருமுறைத் திரட்டு நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றன. திருமுறைத் திரட்டு வெளியீட்டு விழாத் தலைவர் தமிழ்க் கடல், சிவமணி திரு. ராய. சொக்கலிங்கனார் அவர்கள். பாராட்டுரை வழங்கியவர்கள் திரு. ப. இராமநாத பிள்ளை அவர்கள். செல்வி அன்பு மீனாள் அவர்கள். திரு சுப. அருணாசலம் அவர்கள். வித்துவான் முத்து வேங்கடசலம் அவர்கள். அதன் பின்னர் சிறப்பு மிக்க இசை நிகழ்ச்சிகளும் இரவு பஞ்சமூர்த்திகள் திருஉலா நிகழ்ச்சியும் நடைபெற்றன. மறு நாள் காலை சிவ பூசையும் பகல் மகேசுவர பூசையும் நடைபெற்றன. விழாவிற்குப் பலதுறைப் பெருமக்களும் வந்து சிறப்பித்தார்கள்.

● ஆர்வம், உழைப்பு, புதுமை போற்றும் தன்மை இவற்றை உடையவர்கள், பலரது கவனத்திற்கும், போற்றுதலுக்கும் உடையவர்கள் ஆவதில் வியப்பில்லை. இதற்கு திரு. ஆறு. அழகப்பன் எம். ஏ., எம். லிட், அவர்கள் ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள்.



அழகப்பன் அவர்கள், அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளர், பல்கலைக் கழக நூல்கள் வெளியீட்டுப் பொறுப் பாளர், தமிழ் நாடக மன்ற இயக்குநர், ஆகிய பொறுப்புகளை ஏற்றுச் சிறப்போடு பணியாற்றி வருகிறார்கள்.

டில்லி பல்கலைக் கழக மானியக் குழு இன்றியமையாததும் உயர் வுடையதுமான சில தலைப்புகளில் ஆராய்ச்சி மேற்கொள்பவர் களுக்கு மட்டுமே உதவித் தொகை ளளித்து வருகிறது.

அழகப்பன் அவர்கள் எம். லிட். பட்டம் பெறுவதற்காகத் தமிழ் நாடோடிப் பாடல்கள் பற்றிய திறனாய்வினை மேற் கொண்ட போது மேற்படி மானியக் குழு வினர் ரூ. 2500 உதவித் தொகை அளித்ததுடன் இப்பொழுது டாக்டர் பட்டத்திற்காக மேற் கொண்டுள்ள தமிழ் நாடகங் களின் பரிணாம வளர்ச்சி (Evolutin of the Tamil Drama) என்ற ஆராய்ச்சிக்கு ரூ. 750 உதவித் தொகை நல்கியுள்ளார் கள். அழகப்பன் அவர்கள் நாட கத் துறையில் பேரார்வம் உடை யவர்கள். அவர்கள் எழுதிய பல நாடகங்களில், சிரித்த மலர், நாடகச் செல்வம், திருவள்ளுவர், மேடை நாடகங்கள். முத்துச் சிப்பி எள்ளல் நாடகங்கள் என்ற நாடகங்கள் நூல்களாக வெளி வந்துள்ளன. நாடகத்துறையில் ஆர்வமுடைய அனைவரோடும் அழகபபன் அவர்கள் தொடர்பு கொள்ள விரும்புகிறார்கள்.

● புதுப்பட்டி திரு வீர. கா. காசி விஸ்வநாதன் செட்டியார் அவர்களின் செந்திலகம் என்ற புதுமனை புகுவிழா சௌமிய ஆண்டு வைகாசித் திங்கள் பதின் மூன்றும் நாள் (26 5-69) சிறப் புடன் நடைபெற்றது. காசி விஸ்வ நாதன் செட்டியார் அவர்கள் மதுரை. ஈஸ்டர்ன் கெமிகல் இண் டஸ்ட்ரீஸ், கோவை ஈஸ்டர்ன் ஏஜென்ஸீஸ், சென்னை ஆறுமுகம் அன்கோ தொழில் நிறுவனங் களின் பங்குதாரரும் இயக்குநரும் ஆவார்கள்.

● உலகம்பட்டி திரு. எஸ். பழநியப்பச் செட்டியார் மகன் திருவாளர் செல்வன் சுப்பையா விற்கும் நெற்குப்பை திரு. எஸ். கே. சோமசுந்தரம் செட்டியார் அவர்களின் புதல்வி திருவாட்டி செல்வி கல்யாணிக்கும் சௌமிய ஆண்டு வைகாசித் திங்கள் (18-5-69) ஆம் நாள் திருமணம் மிகச் சிறந்த முறையில் நடை பெற்றது. மணமகனின் தந்தை யார் சென்னை ராஜா பேப்பர் மார்ட்டின் பொறுப்பாளர் ஆவார்.

● தேடாமலே சிலருக்குச் சில வகையான செல்வங்கள் கிடைப் பதுண்டு. அப்படிப்பட்ட செல் வங்களில் ஒன்றுதான் குரல். குரலின் பெருமை இசையுல



பெற்ற வர்த்தக ஒலிபரப்பில் இப்பொழுது அறிவிப்பாளராகப் பணிபுரிந்து வருகிறார்கள், மேடை நாடகங்களில் நடிக்கின்ற அனுபவமும் இவர்களுக்கு உண்டு. கல்கி நுண்கலைக் கழகத்தில் இவர்கள் உறுப்பினராக விளங்கி வருகிறார்கள்! திரைப்பட நடிகர் ஜெயசங்கர் அவர்கள் முக்கிய பாகமேற்று நடிக்கும் 'தேவை ஒரு தங்கை' என்ற நாடகத்தில் இவர்களும் நடித்து வருகிறார்கள். இவர்களுடைய எழுத்தோவியங்களில் 'திருவிழாவாம் திருவிழா' என்பது புத்தகமாக வெளிவந்துள்ளது. நகரத்தார் கலைக் கழகத்தின் செயலாளர்களில் ஒருவராக இவர்கள் விளங்குகிறார்கள்.

கிற்கே உரியதாக விளங்கிப் பின்னர் மேடைப் பேச்சிற்குத் துணையாகி, இப்பொழுது ஒலிபரப்புக் கலைக்கும் உயர்வு தந்து கொண்டிருக்கிறது. ஒலிபரப்புக் கலைக்குப் பெருமை தருபவராகத் திரு க. ஜெயம்கொண்டான் அவர்கள் விளங்குகிறார்கள். மேலைச்சிவபுரியைச் சொந்த ஊராகக் கொண்ட அவர்கள் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் புகுமுகக் கல்வி கற்றவர்கள். மருந்து விற்பனைத் துறையில் ஏழாண்டு கால அனுபவம் உடையவர்கள்.

1962-ஆம் ஆண்டு ஜுன் திங்கள் அகில இந்திய வானொலி நிலையத்துச் சென்னைக் கிளையில் தமிழ் நிகழ்ச்சி அறிவிப்பாளர் பணியினை மேற்கொண்டார்கள். வானொலி நிலையத்திலுள்ள பல்வேறு துறைகளிலும் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு தாமே நிகழ்ச்சிகளை எழுதித் தயாரிக்கும் ஆற்றல் பெற்றவர்கள்.

1969-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13-ஆம் நாள் தொடங்கப்

● தேவகோட்டை உ. மு சுப. லெ. அழ. அழகப்பச் செட்டியார் அவர்களின் புதல்வன் திருவாளர் செல்வன் மெய்யப்பனுக்கும் அந் நகர் பழ வெ. இராம. லெ. குப. சுப்பிரமணியச் செட்டியார் அவர்களின் புதல்வி திருவளர் செல்வி மீனாட்சிக்கும் சௌமிய ஆண்டு ஆனித் திங்கள் நாலாம் நாள் (18-6-69) திருமணம் நடைபெற இருக்கிறது.

அழகப்பச் செட்டியார் அவர்கள் இந்தியன் வங்கி இயக்குநர் உ. மு. சுப. லெ. மெ. மெய்யப்பச் செட்டியார் அவர்களின் சகோதரர் அவர்கள்.

● தேவகோட்டை எஸ். எம். பிஎல். எஸ். பி எஸ்எம். எஸ்எம். சோமசுந்தரம் செட்டியார் மகன் திருவளர் செல்வன் வள்ளியப்பனுக்கும் (Final B.Sc) மேற்படி நகர் ஏ வி. கே. எம். ஆவிச்சி செட்டியார் மகள் திருவளர் செல்வி சுவர்ணவல்லிக்கும் திங்கள் பதினெட்டாம் நாள் (2-7-69) திருமணம் நடைபெற இருக்கிறது.

● தேவகோட்டை ராம. அரு ராம. வெ. அரு. அருணாசலம் செட்டியார் புதல்வன் நிறைநாட் செல்வன் சோமசுந்தரத்திற்கும் அந்நகர் உ. மு. சுப. லெ சுப. சுப்பிரமணியன் செட்டியார் புதல்வி நிறைநாட் செல்வி சிதா லெட்சுமிக்கும். வைகாசித் திங்கள் இருபதாம் நாள் (2-6-69) திருமணம் நடைபெற்றது.

● 29-6-69-ஆம் நாள் சென்னையில் செட்டி நாடு ஆர்ட்ஸ் அகடமி என்ற பெயரில் நுண் கலைக் கழகம் ஒன்று தொடக்கப் பெற இருக்கிறது. அன்று கவியரசு கண்ணதாசன் அவர்கள் தலைமையில் நவரசக் கவி அரங்கமும் ஸாயிபாபா கலாவதி. குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற இருக்கின்றன.

● ஆத்தங்குடி சித. மு. நா. நா. நாராயணன் செட்டியார் மகன் திருவளர் செல்வன் மீனாட்சி சுந்தரத்திற்கும் கண்டனூர் அ சி நா. சி. நா பழநியப்ப செட்டியார் அவர்கள் மகள் திருவளர் செல்வி கோதைக்கும் சௌமிய ஆண்டு ஆனித் திங்கள் 18 (2—7—69) ஆம் நாள் திருமணம் நடைபெற இருக்கிறது.

● வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடியில் சௌமிய ஆண்டு வைகாசித் திங்கள் முப்பத்திரண்டாம் நாள் (14-6-69) மாலை 6-30மணி அளவில் அப்சரா திரையரங்கு திறப்பு விழா சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.விழாவிற்குத் தமிழ்நாடு உணவு அமைச்சர் மாண்பு மிகு ப.உ. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். தமிழ் நாடு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு கருணாநிதி அவர்கள் திரையரங்கைத் திறந்து வைக்க, தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சங்கத் துணைத் தலைவரும் நகரத்தார் கலைக் கழகத் தலைவரும் திரைப்பட அதிபருமான மேன்மை மிகு திரு. ஏ. எல். சீனிவாசன் அவர்கள் திரைப்படக் கருவியை இயக்கி வைத்தார்கள். அப்சரா தியேட்டரின் உரிமையாளர்கள் திரைப்படத் தயாரிப்பாளர் திரு. வி. அருணாசலம் அவர்களும் பாரதிப் பதிப்பகம் உரிமையாளர் சிதம்பரம் அவர்களும் ஆவார்கள்.

● மேலைச்சிவபுரி பேருந்து வண்டி நிலையத்தில் அண்ணாமலை செட்டியார் பிரயாணிகள் தங்கும் விடுதியும் அலமேலு ஆச்சிதண்ணீர்ப் பந்தலும் அண்மையில் திறக்கப் பெற்றன. விழாவில் அரசு தொடர்பான அதிகாரிகளும் கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் அவர்களும் எ. வ. சு. அழகப்பன் எம். ஓ. எல். அவர்களும் மற்றும் பல பெருமக்களும் கலந்து கொண்டார்கள்.

மழமழவென்று தண்ணீர் ஊறியதற்குக் காரணம்?

மழை பெய்துவிட்டது!

காரணத்தைத் தெரிந்து கொண்ட நீங்கள் கதை எழுதியவர் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா?

—எஸ். பி. எல். பழநியப்பா பி. ஏ., பி. எல் அவர்கள்

திருமுகம்

தங்கள் நகரத்தார் இதழைக்கண்டு உண்மையிலேயே பெரு மகிழ்ச்சி எய்தினேன். எந்த ஒரு நிறுவனமும், எந்த ஒரு கட்சியும் எவ்வளவு பொருள் வளம் பெற்றிருந்தாலும் தனக்கென ஓர் இதழைப் பெற்றிராவிட்டால் அது வலிவு இழந்தது போலவே தென்படும்.

நகரத்தார் சமுகத்தில் கல்வியில் ஆர்வமுள்ள மாணவ மாணவிகள் பலர் போதிய பொருள் வசதி இல்லாமையால் உயர் கல்வி கற்க இயலாத நிலையில் உள்ளனர். இவர்களின் நலன் குறித்துப் பல நகரத்தார் பொது அமைப்புகளும் தனிப்பட்ட பெருமக்களும் தகுதியுள்ள மாணவர்களுக்கு (deserving candidates) நன்கொடையாகவோ அல்லது திருப்பித்தரக்கூடிய உதவித் தொகையாகவோ (returnable scholarships) பணவுதவி செய்து வருகிறார்கள். இது விவரங்களைப் பலர் அறியாமல் இருக்கலாம். எனவே இப்படியுள்ள பொது நிறுவனங்களையும் புரவலர்களையும் நகரத்தார் பத்திரிகையின் வாயிலாகத் தெரியப்படுத்தினால் தகுதியுடையவர்கள் பயனடைவார்கள்.

வேந்தன்பட்டி
30-5-69

சோம. இராமலிங்கம் பி. ஏ.
(Income-tax Practitioner)

கல்வி வளர்ச்சிக்கு இயலும் வகையால் உதவும் பெருமக்கள் தங்களைப் பற்றிய விபரங்களை அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். அவற்றைப் பெருமிதத்துடன் வெளியிடக் காத்திருக்கிறோம்.

—ஆசிரியர்

வைகாசி இதழில் தேவை மணமகன், மணமகள் என்ற பகுதியைப் பார்த்து எல்லையில்லாத மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் அதில் மணமகனுக்குக் கொடுக்கின்ற சீர்வரிசைகளைப்பற்றி வெளியிட்டிருக்கிறீர்களே! எனக்கு வியப்பாக இருந்தது. பெண் வீட்டாருக்குச் சிரமமற்ற முறையில் திருமணங்கள் நடைபெற நகரத்தார் இதழ்பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு நம் இனத்து இளைஞர்களும் உற்ற துணையாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை 26
7-6-69

வலம்புரி சுந்தரம்

சென்னை-14, நாவல் ஆர்ட் பிரிண்டர்சில் அச்சிடப்பெற்று சேது நிலையத்திற்காக வெளியிடுபவர்: பழ. சேது ஆச்சி, 12-இராமாநுசம் தெரு, சென்னை-17. தமிழ்நாடு.
ஆசிரியர் : புலவர் நாகசண்முகம்